1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 3-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு தை மாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## தினந்தோறும் கிறிஸ்மஸ்

( சுவாமி ஜே. எம். நிக்கோலாஸ் )

பெத்லெகேம் தொழுவத்தில் நடைபெற்ற பரமஇரகசியத்துக்கும், நாள்தோறும் நம்கத்தோலிக்க பீடங்களில் நடைபெறும் பரமஇரகசியத்துக்கும் பெரும்ஒற்றுமை உண்டு. பீடத்தில் உண்மையாகவே கிறீஸ்துநாதர் பிறக்கிறார். அவர் சற்றுமுன் அங்கு இல்லை. அவர் திருவாய் மலர்ந்தருளிய மூன்று வார்த்தைகளை அவருடைய குருவானவர் கூறியதும், உடனே தம்உடல், இரத்தம், தேவசுபாவம் இவற்றுடன் பிரசன்னமாகிறார் கிறீஸ்துபிரான்.

புதிதாய்ப்பிறந்த அரசரின் அடையாளம் என்ன? "குழந்தையைத் துணிகளில் சுற்றி முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்" எனத்தேவதூதன் அன்று பெத்லெகேம் இடையர்களிடம்கூறினர். பீடத்திலும் அதேஅடையாளங்கள் தான். குருவானவர் தேவவசீகர வார்த்தைகளை உச்சரித்த பின், பீடத்தின் அருகில்போனல் என்ன காண்கிறோம்? ஒருசிறு அப்பம். நித்தியரும், சர்வவியாபியுமானதேவன் அந்தச்சிறு அப்பத்துக்குள் தம்மை அடக்கிக்கொண்டுஇருக்கிறார். எல்லையற்ற கடவுள்ஒருசிறுஇடத்தில் தம்மை வைத்திருக்கிறார்.

சிறுகுழந்தையால் பேசமுடியாது. மெல்லிய குரல்சத்தமே அதன் பாஷை. தொழுவத்திலும், பீடத்திலும் யேசுஒன்றுமே சொல்வதில்லை. வார்த்தையானவர் மௌனமாயிருக்கிறார். வார்த்தையானவர் மூலமாய்ச் சகலமும் உண்டாக்கப்பட்டது. உண்டாக்கப்பட்டவைகளில்எதுவும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை.

தொழுவத்தில் இருந்தது போல் யேசு இன்னும் கந்தைத் துணிகளால் போர்த்தப்பட்டிருக்கிறார். அவரைக்கிடத்தியிருக்கும் துணியையும், அப்பத்தின் வெண்மையையும் கவனியுங்கள். நம்மேல்கொண்ட நேசத்தினல் அவர்தாமே தெரிந்துகொண்ட உடை இதுதான். குருவானவரை—அதிலும் இந்தமகத்துவம்நிறைந்த பலியை முதன்முறையாக ஒப்புக்கொடுக்கும் குருவானவரை உற்றுநோக்குங்கள். அவர் பரிசுத்த கன்னிமரியையப்போல் கண்ணீர்சிந்துகிறார். புதிதாய்ப் பிறந்திருக்கும் தன்குழந்தையின் தொட்டில் அருகில் நிற்கும் இளம் தாயைப்போல் அவர் காணப்படுகிறார். அவருடைய கரம் நடுங்குகிறது. சற்பிரசாத அப்பத்தைத் தொடமுதலாய் அஞ்சுகிறார். முழந்தாளிட்டு அவரை ஆராதிக்கிறார். "நீர் என்குமாரன், இன்று உம்மை ஜெனிப்பித்தேன்" எனப் பிதாவாகிய சர்வேசுரனுடன்சேர்ந்து சொல்லும் உரிமைபெறுகிறார்.

பெத்லெகேம் என்றால் அப்பத்தின்வீடு என்று பொருள். கத்தோலிக்ககோவில் இன்றைரு பெத்லெகேம். பெத்லெகேம தொழுவத்தில் இருந்தது போல் அவர் பீடத்தின் பேழையில் இருக்கிறார். "இந்தமேசையானது கிறீஸ்துநாதர் பிறந்த தொழுவத்தைக் காட்டுகிறது" என அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் நம்பீடத்தைப் பற்றிச் சொல்லுகிறார். "தொழுவத்தைநோக்கிப் பிராணிகள் செல்கின்றன; அதில் தங்குகின்றன. நம்கோவில்களும் அப்படியே.

### நல்லாயன் பொன்மலர்

மானிடர் அங்கு செல்கின்றனர்; கிறீஸ்துநாதர் அங்குகிடத்தப்பட்டிருப்பதைக் காண்கின்றனர்; உயிருள்ள அப்பத்தை அருந்துகின்றனர்" என அர்ச். புரூனே வசனிக்கிறார்.

கன்னிமரியாயின் திருவயிற்றிலிருந்துபிறந்த கிறீஸ்துநாதர் பிதாவாகிய சர்வேசுரனுக்கு வருவித்த மகிமையையே சற்பிரசாத பிறப்பிலும் வருவிக்கிறார். திவ்வியபூசைப்பலியும், திவ்விய நற்கருணையும் நித்தியஆராதனையைக் கடவுளுக்குச் சமர்ப்பிப்பதுமன்றி, கணக்கிடமுடியாத வரப்பிரசாதங்களையும், மகிமையையும் பெற்றுக்கொடுக்கின்றன. உலகத்தைப் பிரகாசிப்பித்துத் தேற்றி அர்ச்சிக்கும் வெளிச்சமும், வரப்பிரசாதமும், பெத்லெகேமிலிருந்தும், பீடத்திலிருந்தும் வருகின்றன. அற்பதூசிக்குச் சமானமான, அகங்காரம்நிறைந்த மனிதன் இன்னும் நாசமாக்கப் படாதிருப்பதன் காரணம் பீடத்தின் பேழையே. கிறீஸ்துநாதர் அங்கிருந்துகொண்டு பாவங்களுக்காக உலகத்தைப் பழிவாங்கவிரும்பும் தம்பிதாவின் கரத்தைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்.

"உன்னதஸ்தலங்களில் சர்வேசுரனுக்கு மகிமைப் பிரதாபமும், பூலோகத்தில் நல்மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது" என அன்று வானுலகசேனையின்கூட்டம் பாடியதைக் குருவானவர் புதுத்தொழுவமாகிய பீடத்தினருகில்நின்று கூறுகிறார். "ஒருபாலன் நமக்காகப் பிறந்திருக்கிறார்" என இசையாஸ் தீர்க்கதரிசியுடன் குருவானவரும்கூறலாம்.

யேசுநாதர் நமக்காகப் பிறந்திருக்கிறார். அவர் வருவது சம்மனசுகளுக்காக அல்ல. உங்களுக்காகவும் எனக்காகவுமே. உலகிலுள்ள ஒவ்வொருவரையும் அவர் நேசிக்கிறார். அந்தச்சற்பிரசாதபாத்திரத்தில் உங்களுக்கென்று அவர் காத்திருக்கிறார்.

( தொடர்ச்சி 8-ம் பக்கம் )

---

தபசுகாலத்தின் முன்வரும்

## 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

( மத். 20: 1—16 )

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்ன உவமையாவது: பரலோகஇராச்சியம் தனது கொடிமுந்திரித்தோட்டத்துக்குக் கூலியாட்களை அமர்த்துவதற்காக அதிகாலையிற் புறப்பட்டுப் போன குடும்பத்தெசமானுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் கூலியாட்களோடு நாளொன்றுக்கு ஒரு தெனியர் என்னும் நாணயம்கொடுப்பதாக ஒப்பந்தஞ்செய்து, தனது கொடிமுந்திரித்தோட்டத்துக்கு அவர்களை அனுப்பினன். ஏறக்குறைய மூன்றுமணிநேரத்திலும் அவன் வெளியேபோய், பொது இடத்தில் வேலையற்று நின்றுகொண்டிருந்த வேறுசிலரைக் கண்டு: நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப் போங்கள்; நியாயமானபடி உங்களுக்குக் கூலிகொடுப்பேனென்று அவர்களுக்குச் சொன்னன். ஆதலால் அவர்கள் அவ்விடம்போனார்கள். அவன் ஆறும், ஒன்பதாமணி வேளைகளிலும் மறுபடியும் புறப்பட்டுப்போய் அவ்விதமே செய்தான். ஏறக்குறைய பதினொராம்மணிநேரத்திலும் இன்னமும் வெளியேபோய், நின்றுகொண்டிருந்த மற்றச்சிலரையுங்கண்டு: நீங்கள்வேலைசெய்யாமல் சோம்பலாய் நாள்முழுதும் இங்கே நிற்பானேனென்று அவர்களைக் கேட்டான். அவர்களோ: எங்களை யாரும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளாததினல்தான் என்று அவனுக்குச்சொல்ல, அவன் நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப் போங்களென்று அவர்களுக்குக் கூறினன். பொழுது போனதும், கொடிமுந்திரித் தோட்டத்தின் எசமான் தன் காரியக்காரனை நோக்கி: வேலையாட்களை வரவழைத்துக் கடைசியில்வந்தவர்கள் துவக்கி முதல் வந்தவர்கள்வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான். ஆதலால், ஏறக்குறையப் பதினொராம் மணிக்கு வந்தவர்கள்முறை வந்தபோது அவர்களும் ஒவ்வொருதெனியர் பெற்றார்கள். அப்போது முந்திவந்தவர்களும் அனுகித் தாங்கள் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளப் போவதாக எண்ணினர்கள். ஆயினும், அவர்களும்ஒவ்வொருதெனியர்தான் வாங்கினர்கள். அதை வாங்குகையில் குடும்பத்தெசமான்பேரில் முறையிட்டு: கடைசியில் வந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலை செய்திருந்தும், பகற்பாரத்தையும், வெய்யில் அகோரத்தையுஞ் சுமந்தவர்களாகிய எங்களோடு இவர்களையுஞ் சரிசமானமாக்கினீரே என்றார்கள். அவனே அவர்களில் ஒருவனை நோக்கி மறுமொழியாக: நண்பனே, நான்உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ என்னோடு ஒத்துக்கொண்டது ஒருதெனியர் அல்லவோ? உன்னுடையதை நீ எடுத்துப்போ; உனக்குக் கொடுத்ததுபோல் கடைசியில்வந்த இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். அல்லது நான் விரும்புகிறதைச்செய்ய எனக்குச் சுதந்திரமில்லையோ? அல்லது நான் நல்லவனயிருக்கிறபடியால் உன் கண் கெட்டதோவென்றான். இவ்வண்ணமே கடைசியானவர்கள் முதலாகவும், முதலானவர்கள் கடைசியானவர்களாகவும் இருப்பார்கள்; ஏனெனில், அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேராயிருக்கிறார்கள் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய இரட்சகர் பேசியபாஷை

லண்டன் நகரிலே அர்ச். தொமினிக்குவின் ஞானவிசாரணைப்பங்குக் கத்தோலிக்கர் சென்றமார்கழிமாச நடுப்பகுதியிலே இருவாரங்களாக நமது திவ்வியகர்த்தர்தாமே பேசிய அராமெக்கிய பாஷையில் திவ்வியபூசைகள் நிறைவேறக் கேட்டுநின்றார்கள். அத்துடன் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்த பிரார்த்தனைமுறை ஒன்றையும் அறிந்துகொண்டார்கள். இந்தத்திவ்வியபூசைகளை நிறைவேற்றியவர்கள் பாபிலோனின் பத்திறியாக்குவாகிய ஏழாவது யோசெவ் கனிமா ஆண்டவரும், அவரின் துணைமேற்றிராணியாரான ஸ்ரீபானியே காற்சோ ஆண்டவருமே. தமது சொந்த நாடாகியஈறாய்க்கிலே (மெசொப்பொத்தேமியா) இந்தப்பத்திறியாக்கு ஆண்டவர் ஓர் லௌகீக அரசராவுகம் கௌரவம் வகித்திருக்கிறார். இவரது மேற்றிராசனநகர் மொசூலாகும். ஆனால், வருடத்திற் பெரும்பகுதியை அவர் தமது நாட்டின் தலைப்பட்டணமாகிய பாக்டாட்நகரிலே செலவிடுகின்றார். அராமெக் என்று அதிகஞ் சாதாரணமாய் அறியப்படுகின்ற சால்டியபாஷையே இவரது பாஷையாகும். இப்பாஷையிற்றான் அர்ச். மத்தேயு தமது சுவிசேஷத்தை எழுதினார். இது கிறீஸ்தயுகத்துக்கு எவ்வளவோ காலத்தின்முன் பாபிலோனிலே சிறைப்பட்டிருந்து திரும்பிய யூதர்களால் பலஸ்தீனாவுக்குக் கொண்டுபோகப்பட்டது. நமது திவ்வியகர்த்தர் பேசியகால முதல் இதுவரை அதுசொற்ப மாற்றமே அடைந்திருக்கிறது. மூவிராசாக்கள் மெசொப்பொத்தேமியாவிலிருந்தே பெத்லெகேமுக்குத் தங்கள் பிரயாணத்தைத் தொடக்கினார்களென்பது கிறீஸ்த பாரம்பரியமாகும்.

## பிரான்ஸ்தேசமும் குருமாரும்

குருத்துவத்துக்கான அழைத்தல்களின்தொகை குறைந்துகொண்டுவருவதையிட்டுப் பிரான்ஸ்தேசத்திலே திருச்சபைக்குப் பெரிதும்கஷ்டநிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கு எடுக்கப்பட்டுள்ள கணக்கின்படி 15,416 விசாரணைப்பங்குகள் தற்போது குருமார் இல்லாமல் கைவிடப்பட்டிருக்கின்றன. ஆனால், நூறுபேரைக்காட்டிலும் குறைந்ததொகையான கத்தோலிக்கரைக்கொண்ட விசாரணைப்பங்குகளும் இருப்பதாலே எதிர்பார்த்ததிலும் இக்கஷ்டநிலைமை குறைவானதென்றே சுட்டிக்காட்டப்படுகிறது. தற்போதுள்ளவர்களிலும் 9,800 குருமார் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். 25—28 வயதுக்கிடைப்பட்ட ஒவ்வோர் பத்தாயிரம் வாலிபருக்கும் 33 வாலிப குருமாரே கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது. 1929-ம் 39-ஆண்டுகளுக்கிடையிலே பிராஞ்சில் குருத்துவ அழைத்தல்களின் தொகை வெகுவாக அதிகரித்திருந்து, பின்னர் உண்டான வீழ்கையை யுத்தம்முடிந்தபின்னர் இன்னமுமே நிறுத்த முடியாமலிக்கிறது.

## இஸ்றயேலும் கிறீஸ்தவர்களும்

யூதர்களின் இஸ்றாயேல்நாட்டிலே தாபரிப்பதற்குப்போதிய கிறீஸ்தவர்கள் இல்லாமையாலே கோவில்களும், பாடசாலைகளும், கன்னிகாமடங்களும், மற்றும் கிறீஸ்தஸ்தாபனங்களும் மூடப்படுகின்றனவென்று அங்கே நசரேத்தையும், கலிலேயாவையும் அடக்கியரொலேமேய்டேயின் அதிமேற்றிராணியாரான ஹாக்கிம் ஆண்டவர் கூறுகின்றார். இஸ்றாயேல் நாட்டிலுள்ள இரண்டேயிரண்டு கிறீஸ்தமேற்றிராணிமாருள் ஒருவராகிய இவர் தற்போது லண்டன்நகருக்கு விஜயஞ்செய்திருக்கின்றார். தமது மேற்றிராசனத்தில் 13 கோவில்களும், இஸ்றாயேல் நாடுமுழுவதிலும் சுமார் 50 கிறீஸ்தஸ்தாபனங்களும் மூடப்பட்டிருப்பதாகவும், ஆனால், இற்றைக்கு இருவருடங்களின்முன் இருந்ததிலும் தற்போது கத்தோலிக்கருக்கு அதிகமானசுதந்தரம் இருந்துவருவதாகவும், யுத்தத்துக்கு முன் இஸ்றாயேல்நாட்டில் 60,000 கத்தோலிக்கர்வரையில் இருந்தவிடத்திலே இப்போது சுமார் 23,000 கத்தோலிக்கரும், பிறசபைகளைசேர்ந்த 10,000 கிறீஸ்தவர்களுமே இருந்துவருவதாகவும் இவர் அறிவிக்கின்றார். ஜெருசலேம்நகரில் ஒருலட்சம்பேருக்குமேற்பட்ட யூதர்களும், கிறீஸ்தவர்கள் 500 பேருமே இருக்கின்றார்களாம்.

## கருதினல்மாரும், ஸ்தானிகரும்

தற்போதுகருதினல்மார் திருச்சங்கத்தில் 51 கருதினல்மாரே இருக்கின்றார்கள். இவர்களில் இத்தாலியர் 19 பேர். இத்தாலியர் அல்லாத பிறசாதியினர் 32 பேர். திருச்சபைப் பரிபாலனத்திலும், திருக்கந்தோரிலும், திருச்சங்கங்களிலும், திருச்சபை நீதிஸ்தலங்களிலும் தற்போது கடமைபார்க்கிறவர்களில் நூற்றுக்கு 20 வீதமானோர் இத்தாலியர் அல்லாதவர்கள். இவர்களில் பெரும்பான்மையினர் நன்றாக இத்தாலியபாஷை பேசுகின்றமையால் இந்தச்சாகிய பேதம் கணிக்கக்கூடியதன்று. பிறஅரசுகளினிடமாகவும், பிறநாடுகளிலும் இருந்துவருகின்ற பரிசுத்தஸ்தானத்தின் 54 ஸ்தானீகர்கள், அப்போஸ்தலிக்கஸ்தானாபதிகளில் சுமார் 18 பேர் இத்தாலியர் அல்லாதவர்கள். ஜேர்மனியிலும், யூகோசிலேவியாவிலும், கோறியாவிலும் பாப்பரசரின் பதிலாளிகளாக அமெரிக்க குருசிரேஷ்டர்களும், இந்தியாவிலும், தென்னாபிரிக்காவிலும் அவரது ஸ்தானீகர்களாக உலாந்த குருசிரேஷ்டர்களும், பிரித்தானியிலும், கிழக்கு ஆபிரிக்காவிலும் அவரதுஸ்தானாபதிகளாகப் பிரித்தானிய குருசிரேஷ்டர்களும், எத்தியோப்பியாவிலே ஓர் பெல்ஜிய குருசிரேஷ்டரும், ஈறாய்க், பிராஞ்சிய ஆபிரிக்கா, இந்தோசீனா எனும் நாடுகளில் பிராஞ்சிய குருசிரேஷ்டர்களும் இருந்துவருகிறார்கள்.

# துன்பத்தில் இன்பம்

## இரண்டாம் பாகம்

## துன்பத்தைச் சகிப்பது எப்படி?

### முதலாம் அதிகாரம்

### தேவஇஷ்டப்பிரசாதமுள்ள ஆத்துமத்தோடும் சுத்தகருத்தோடும் துன்பத்தைச் சகிக்கவேண்டும்

(முன்தொடர்ச்சி)

ஆனால், ஓர்கட்டெறும்புக்கடி, சிறுகல்லடிப்பு முதலியவற்றினால் உண்டாகும் கடுப்பு, நோவுபோலுஞ் சின்னஞ்சிறிய வருத்தத்தைத்தன்னும் தேவசித்தத்துக்குப்பணிந்து அவருக்குப் பிரியப்படும்பொருட்டுப் பொறுமையாகச் சகிப்பாயேயாகில் உனக்கு அதனாலே நிச்சயத்தில்நிச்சயமாய் நித்தியசம்பாவனைக்குரிய பேறுபலன் விளையாமற்போகமாட்டாது. அதினாலேயே "ஒரு இராச்சியத்தை வெற்றிகொள்வது, அல்லது ஒருசக்கிராதிபத்தியத்தை ஆள்வதுபோன்றசெயல்கள் சுபாவத்துக்குமேலான கருத்தில் நின்று பிறவாதவைகளாய் இருக்கில் அவைகளிலும்பார்க்க இஷ்டப்பிரசாத அந்தஸ்திலுள்ள ஓர்ஆத்துமம் தேவநேசத்துக்காகச் சகித்துக்கொள்ளும் எந்தச் சின்னஞ்சிறிய நோவாவது, சிலுவையாவது, உபத்திரவமாவது தன்னிலே அதிஉத்தமமானதும், தேவனுக்கு அதிஉகப்பானதுமாய் இருக்கின்றது" என்று ஒருகுருப்பிரசாதி எழுதியிருக்கிறார்.

ஆகவே, உனது எந்தத்துன்பசகிப்பும் தேவனுக்கு உவப்பானதாகி மோட்சத்திற்குப் பறந்துபோய் உனது மோட்சபொக்கிஷமாகிய புண்ணியபேறுகளுடன் சேர்ந்துகொள்வதற்கு உனது இஷ்டப்பிரசாத அந்தஸ்தும், சுபாவத்துக்குமேலான கருத்துமென்கிற இருசிறகுகள் அதற்கு இன்றியமையாத அவசியம்என்று திட்டமாய்நிச்சயித்துக்கொள்ளக்கடவாய்.

ஓ! விசுவாசிகள் தங்கள்சீவியத்தில தங்களுக்கு அனுதினம்நேரிடும் சகல துன்பதுயரங்களையும் தேவஇஷ்டப்பிரசாதத்தோடும், சுத்தகருத்துடனும் அனுபவித்துவருவார்களேயாகில் அவர்கள் எவ்வளவு ஏராளமான புண்ணியபேறுகளை எவ்வளவு சுளுவாய்ச் சம்பாதித்துக்கொள்ளக் கூடும்? அவ்வளவுஎளிதாய் நித்தியஇன்பத்தை, நித்தியசெல்வத்தை, நித்தியமகிமையைத் தேடிக்கொள்ளக் கூடியதாய் இருக்க, அவைகளை அலட்சியஞ்செய்து தேடாமல்விடுவதும், அநித்திய இன்பத்துக்காக, அநித்தியகீர்த்திக்காக இரவுபகல் பிரயாசப்பட்டலைந்து இரட்சணியவேலையை அபாயத்துக்குள்ளாக்கி வருவதும் எவ்வளவு பெரிய குருட்டாட்டம். ஆயினும், இந்தக்குருட்டாட்டத்தில் விசுவாசிகளுக்குள்ளேதானே எத்தனையாயிரவர், எத்தனைலட்சாதிலட்சபேர்வீழ்ந்து மயங்கிக் கிடக்கின்றார்கள்.

அத்தனை தொகைப்பட்டபேர் மேற்படிஆறுதலான சத்தியபோதனையை அறியாமலும், அறிந்தும்உணராமலும், உணர்ந்தும்அனுசரியாமலும் இருந்தபோதிலும் அதுசத்தியமான போதனைதானே. இந்தஆறுதலான போதனையுடனே நான்ஏலவேசொல்லிய ஓர் புத்தியையும்மறவாது அனுசரிக்கப் பிரமாணிக்கமாய்க் கவனிக்கத்தகும்.

நீ அனுபவிக்கும் துன்பதுயரங்களால் உனக்குப் பேறுபலன் ஏராளமாய்ப் பெருகிவர வேண்டுமென்று நீ விரும்பினால், அவைகளை யேசுவின் திருப்பாடுகளுடன் அல்லது அவருடைய திருஇரத்தப்பேறுகளுடன் ஒன்றாகச்சேர்த்துச் சருவேசுரனுக்கு அனுதினம் பலமுறை ஒப்புக்கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் காலையில் ஒருமுறையாவது அப்படிச்செய்தல் வேண்டும். நீ யேசுவின் திருஇரத்தப் பேறுகளுடன் உனதுஅனுதின துன்பங்களைச்சேர்த்து ஒப்புக்கொடுக்கும்போது அவைகளைநீ பட்டனுபவிப்பதில் உள்ளகுறைகள் நிறைவாகி, அத்துன்பங்கள் சந்தேகமொன்றின்றிச் சருவேசுரனுக்கு மகாபிரியமானவைகளும் உனக்குப்பேறுபலன் உள்ளவைகளுமாகிவிடுகின்றன.

பிரியஆத்துமாவே! திவ்வியஇரட்சகர் தமது ஆதிவிசுவாசிகளாகிய அப்போஸ்தலரைநோக்கி "நானே திராட்சக்கொடி, நீங்களோ கிளைகளாய்இருக்கிறீர்கள். ஒருவன் என்னிடத்திலும் நான்அவனிடத்திலும் ஒன்றித்திருந்தால் அவனேமிகுதியாய்க் கனிதருவான்" என்று திருவாக்கருளினார். இந்தஉவமையை நீ சரியாய் விளங்கிக்கொண்டால் நான்உனக்கு இப்போதுரைத்த புத்திமதிகளையும் சரியாய் விளங்கிக்கொள்வாய்.

ஆத்துமம்: நேசசம்மனசானவரே! இந்தஉவமையை நான் நேர்த்தியாய் விளங்கிக்கொள்ளும்படி அதன்பொருளைத் தயவாய் விரித்துக்காட்டியருளும்.

(தொடரும்)

## பாப்பரசரும், பரிசுத்தவருடமும்

பரிசுத்தவருடம் ஆரம்பமானபோது, பாப்பரசர் நிறைவேற்றவிருந்த பெரும்பாரமான கடமைகளையும், பெரியதிருவைபவங்களையுமிட்டு அவரது உடல்நலத்துக்கும், சுகநிலைக்கும் பங்கம் ஏற்படுமோவென்று மிகுந்த அச்சம் எழலாயிற்று. ஆனால், உள்ளபடியே பரிசுத்தவருடம் முடிவடைந்திருக்கும்இந்தவேளை 74 வயசுடையவரான பரிசுத்த பிதா சென்ற 1949-ம் ஆண்டு மார்கழிமாதம் இருந்ததிலும் ஒருவயசு குறைவான இளமையுடையோராகக் காணப்படுகின்றார். காஸ்ரெல்கான்டொல்போவிலுள்ள வேனிற்கால மாளிகையில் அவர் செலவிட்ட மாதங்கள்இடமாற்றத்தைஉண்டு பண்ணினவல்லாது அவருக்கு இளைப்பாற்றியைக் கொடுக்கவில்லை. தமது சுகத்தைப்பற்றி அதிகசிந்தனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவருடைய டக்றர்மார் ஆலோசனை கூறியபோது, "ஆனால், நமது சுகமுமே திருச்சபையினதும், விசுவாசிகளினதும் சேவைக்கெனஇருக்கிறது." என்று அவர் பதிலளித்தார். மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் அவர் யாத்திரிகர்களிடையே நடந்துலாவியும், அவர்கள்மத்தியில் எத்தனையோ சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் அவரது சுகநிலை பாதிக்கப்பட்டிருப்பதாக ஒருபோதுமே காணப்படவில்லை.

## கொழும்புப் புதியமேயர்

கொழும்புநகரின் புதியமேயராகத் திரு. எஸ். செல்லமுத்து அவர்கள் சென்ற 10-ந்திகதி புதன்கிழமை தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். தேர்தலிலே இவருக்குப் 17 சம்மதிச்சீட்டுகளும், இவருடன் அப்பதவிக்குப் போட்டியில்நின்ற திரு. ரி. ருத்ரா என்பவருக்குப் 11 சம்மதிச்சீட்டுகளும் கிடைத்தன. இவரே யு. என். பி. கட்சியைச்சேர்ந்த கொழும்புநகரின் முதல் மேயராவர். உதவிமேயராகத் திரு. சி. ரி. கிறேரோ அவர்கள் அதே தொகையான சீட்டுகளைபெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவரும் யு. என். பி. கட்சியினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### காங்கேசன்துறைச் சீமேந்து

காங்கேசன் துறையிலுள்ள அரசினர் சீமெந்துத் தொழிற்சாலையின் பேரால் இலங்கையிலே கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை முதலாம் பத்தொன்பது இடங்களிலே சீமெந்து விற்பனை செய்வதற்கெனப் பல்வேறு கம்பெனிகாரரும், தனிப்பட்டபேர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனால் சீமெந்துவாங்க விரும்புவார் அவர்களுடன் நேரேஒழுங்குபண்ணிக் கொள்ளவேண்டியது. விற்பனவுகாரர் தொழிற்சாலையிலே ஒருதொன் சீமெந்து 130 ரூபாவீதம் வாங்கி இடத்துக்குத் தக்கதாக 140 ரூபா முதல் 167 ரூபாவரையில் பல்வேறு விலைகளிலும் விற்பனைசெய்வார்கள். யாழ்ப்பாணத்திலே அதனை விற்பேபாராக "நோர்த் சிலோன் பில்டேர்ஸ்" கம்பெனியார் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றனர். இவர்கள் தொன் ஒன்று 130 ரூபா வீதம் வாங்கி 140 ரூபாவீதம் விற்பனைசெய்வார்கள். அதனால் அதிகம் குறைந்தவிலையில் சீமெந்து விலைப்படவிருப்பது யாழ்ப்பாணத்திலேயாகும்.

### மலையாளப் புகையிலை வியாபாரம்

யாழ்ப்பாண-மலையாளப் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச்சங்கத்தின் வருடாந்தபொதுக்கூட்டம் சங்கத்துப் புகையிலை பதனிடும்நிலையத்திலே சமீபத்தில் நடைபெறலாயிற்று. அதிலே சங்கத்துக்குப் புகையிலை உதவிய அங்கத்தவர்களுக்கு மூன்றரைலட்சம் ரூபா கழிவுகொடுபடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கூட்டத்திற்குத் தலைமைவகித்துத் திரு. ரி. சி. இராசரத்தினம்அவர்கள்பேசியபோது, சென்ற 1950-ம்ஆண்டிலே மொத்தமாகப் 10,66,831 ரூபாவுக்கு வியாபாரம் நடைபெற்றிருப்பதாகத் தெரிவித்தார். 1934-ம்ஆண்டு இச்சங்கம் ஆரம்பமான காலமுதல் அதன் தலைவராக இருந்துவந்த திரு. ரி. சி. இராசரத்தினம் அவர்களே மீண்டும் அதன் தலைவராகத்தெரியப்பெற்றிருக்கின்றார். காரியதரிசியாகத் திரு. கே. நடராசா அவர்கள் மீண்டும் தெரியப்பட்டுள்ளனர். பதினைந்துபேரைக்கொண்ட நிர்வாகசபைஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### ஜோகூர்ப் பலாமரங்கள்

வலிகாமம்வடக்கு வாசிகளுக்கு ஆயிரக்கணக்கான ஜோகூர்ப் பலாமர விதைகளை வலிகாமக் கிராமஅபிவிர்த்திச்சங்கங்களின் யூனியன் காரியதரிசியான திரு. அன்ரன் அபிவாசகம் அவர்கள் வழக்கியிருக்கின்றார். இந்த இனத்தைச்சேர்ந்த பலாமரங்களிலிருந்து பதினாறு மாதகாலத்தில் பழம் பறிக்கமுடியும். இது யாழ்ப்பாணத்துக்கு ஓர்புதிய இனமாகும். பாணந்துறையைச்சேர்ந்த திரு. ஆர்தர் டயஸ் அவர்களிடமிருந்து இந்தப்பலாமர விதைகள்கிடைக்கப்பெற்றுப் பல்வேறு கிராமஅபிவிர்த்திச் சங்கங்கள்மூலம் கமக்காரருக்கு இலவசமாக உதவப்பட்டிருக்கின்றன.

### மன்னாரும் மதுவிலக்கும்

மன்னார்ப்பிரிவிலுள்ள கிராமாபிவிர்த்திச் சங்கங்களால் தொடக்கப்பட்ட மதுவிலக்கு இயக்கமானது அப்பிரிவிலுள்ள தவறணைகளை மூடுவதற்காகச்சனசம்மதிகேட்கவேண்டுமென அரசினரை நெருக்கிவருகின்றது. இச்சங்கங்களின் முயற்சியாலே சென்றவருடம் மடுறோட்டிலிருந்த சாராயத்தவறணையும், அரிப்பிலும் நானாட்டானிலுமிருந்த கள்ளுத்தவறணைகளும் மூடப்படலாயின. இன்னும் அப்பிரிவிலுள்ள ஒரேயொருசாராயத் தவறணையையும், எஞ்சியிருக்கும் கள்ளுத்தவறணைகளையும் மூடுவவதற்கான சனசம்மதிகள் சமீபத்தில் கேட்கப்படவிருக்கின்றன. இருவாரங்களின்முன் நொச்சிக்குளத்திலும், மாலுவாடுவிலுமுள்ள கள்ளுத்தவறணைகளை மூடுவதற்கென்று கேட்கப்பட்ட சனசம்மதிகள் பெருவெற்றியளித்திருக்கின்றன. ஆனால், தலைமன்னாரில் கருமம் தோல்வியாயிற்று.

### சுதேசமருந்துப்பாகசாலை

சுதேசமருந்துகள் தயாரிப்பதற்கெனப் 12 லட்சம் ரூபா செலவிலே மத்தியஅவுஷதபாகசாலைஒன்றைச் சுகாதார மந்திரிகாரியாலயம் அமைக்கவிருக்கின்றது. சுதேசவைத்தியசங்கம் கடந்தமூன்று வருடகாலமாகத் தொடர்ந்துநடத்திய கிளர்ச்சியே இது அமைக்கப்படக்காரணமாகும். கொழும்பிலே இதற்குத் தகுதியான ஓர்இடத்தைக் கண்டுகொள்ளமுடியாமற் போயினமையால், மொறட்டுவாப் பட்டினசங்கம் உபகரித்த மூன்று ஏக்கர் விஸ்தாரமான நிலத்திலே இந்த அவுஷதபாகசாலையை ஸ்தாபிக்கச் சுகாதாரமந்திரி காரியாலயம் எண்ணுகின்றது. மருந்துகளைப் பாகஞ்செய்யும் முறைகளைக் கொண்ட புத்தகம்ஒன்றைச் சித்தஞ்செய்யும்படி கம்மிற்றி ஒன்று ஆக்கப்பட்டு, ஏலவே அது பல விதமுறைகளையும் சேகரிக்கத் தொடங்கியிருக்கிறது. இதன்நோக்கம் மருந்துகளைத் தாராதரப்படுத்துவதேயாகும்.

### அரசபெருமானின் விஜயம்

மாட்சிமைதங்கிய ஆறுவது ஜோர்ஜ் அரசரும், எலிசபேத் இராணியாரும் அடுத்தவருடஆரம்பத்திலே ஆஸ்திறேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் செல்லும்வழியிலே இலங்கையைத் தரிசிக்கவிருக்கின்றார்கள். இதுசெய்தி பக்கிங்காம்மாளிகையிலிருந்து உத்தியோகமுறையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இலங்கையிலே அவ்வருட மாசிமாதத்தில் ஐந்துதினங்கள் தங்கியிருப்பார்கள். ஆனால், சரியான திகதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அரசனும் அரசியும் 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 1-ந்திகதி ஆஸ்திறேலியாவையும், அடுத்தவைகாசிமாதம 6-ந்திகதி நியூசிலாந்தையும் போய்ச் சேர்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைவந்து சேருமுன் அவர்கள் ஜிப்றோல்றரிலும், மோல்த்தாவிலும், ஏடினிலும் தங்கித்தான் வருவார்கள். அவர்கள் இலங்கையைத் தரிசிக்குமிடத்து, பிரித்தானியில் ஆட்சிபுரியும் ஓர்அரசரும், அரசியும் இலங்கைமண்ணில் கால் வைப்பது அதுவே முதன்முறையாகுமாதலின் சரித்திரபூர்வமான தொன்றாகும்.

### கல்லோயாவும்நெற்செய்கையும்

1950–51-ம்ஆண்டிலேகல்லோயாப் பள்ளத்தாக்கில் திருத்தப்படவேண்டுமெனத் திட்டஞ்செய்யப்பட்டிருந்த 1,200 ஏக்கர் நிலமும் முற்றாகத்திருத்தப்பெற்று நெல்விதைக்கப்பட்டுள்ளது. இந்தக்காணியின் செழிப்பைக் கவனிக்கும்போது, நல்விளைவுகிடைக்குமெனத் தோற்றுகிறது. இன்னும் 1952-ம்–53-ம் ஆண்டிலே திருத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள காணியிலும் ஏலவேதானே வேலைஆரம்பமாகிவிட்டது. கல்லோயா நீர்த்தேக்கத்தின் இடதுகரை அணைக்கட்டை அமைக்கும் ஒப்பந்தவிஷயமாக ஓர்அமெரிக்க கம்பெனியுடன் கல்லோயாச்சபை கலந்துபேசிவருகிறது.

---

—சீனாவிலே நான்கின்நகரிலுள்ள ஜின்லிங்பெண்கள்கல்லூரியின் அமெரிக்க போசிரியையான செல்வி ஹெலென்பெறிஸ் எனும்மாது ஓர் மாணவிஎழுதிய வியாசத்திலே "அமெரிக்கஐக்கியதேசம் கோறியாவுக்கு ஓர் சேனையை அனுப்பியது" என்றிருந்ததை "ஐக்கியநாடுகள் கோறியாவுக்கு ஓர்சேனையை அனுப்பின" என்று திருத்தியதற்காகக் கம்யூனிஸ்த அதிகாரிகளால் தனதுபதவியிலிருந்து நீக்கிச் சீனாவிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருக்கிறாள்.

## பொதுவர்த்தமானம்

### மாஷல்ரிற்றோவின் முழக்கம்

ருஷியஇரும்புத்திரையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட யூகோசிலேவியாவின் சர்வாதிகாரியான மாஷல் ரிற்றோ அந்நாட்டின் புதியஅரசிறைவருடத்திலே இராணுவசெலவுக்கென்று 260 கோடிரூபா உதவுமாறு அதன் பாராளுமன்றத்தைக் கேட்டுப் பேசியபோது, அயலிலுள்ளபல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி ஆதியசோவியற் தோழநாடுகள் 6,60,000 போர்வீரரை அடக்கிய சேனைகளைக்கொண்டிருக்கின்றன; சமாதான உடன்படிக்கையிலே அனுமதிக்கப்பட்டவற்றிலும் எவ்வளவோ அதிகங்கூடிய சேனைகளை வைத்திருக்கின்றன; எமது நாட்டுடன் ஏதாவதுசிநேகஉணர்ச்சிகொண்டுதான் அவைகள் சேனைகளைத் திரட்டுகின்றனஅல்ல; யூகோசிலேவியா சமாதானத்தை ஆசிக்கின்றது; சோவியற்அரசு சமாதானம் பேசுகின்றது; ஆனால், அது எங்கள்மட்டில் வேண்டுவதென்ன? நம்மைஅடிமைப்படுத்துவதுதான் எனக்கூறலாயினர்

### துருக்கியும் கம்யூனிஸமும்

தங்கள் நாடுகளிலிருந்து கம்யூனிஸத்தை அடியோடுகளைந்துவிட வேண்டுமெனத் தற்போது கங்கணங்கட்டிநிற்கும்நாடுகளில் துருக்கியும் ஒன்றாகும். அங்குள்ள சர்வகலாசாலைகள், பாடசாலைகளிலிருந்து கம்யூனிஸத்தை ஒழித்துவிடுமாறு துருக்கியகல்வி மந்திரியார் நவமானபோராட்டம்ஒன்றைத் தொடக்கியிருக்கிறார். அதனால் கம்யூனிஸத்தைப் போதிக்கும் புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்களெல்லாம் அந்நாட்டுச் சர்வகலாசாலைகள் எல்லாவற்றிலுமுள்ள நூல்நிலையங்களிலிருந்து அகற்றிவிடப்பட்டிருக்கின்றன. கல்வி சம்பந்தமாக அவற்றை வாசிக்கவிரும்புகின்ற மாணவர்கள் அனுமதிகேட்டு முந்த மனுப்பண்ணிக்கொள்ள வேண்டும்.

### ருமேனியாவில் சதிவேலைகள்

ருஷிய இரும்புத்திரைக்குள் அகப்பட்டுள்ள நாடுகளில் ருமேனியாவும் அடங்கும். அங்கே கம்யூனிஸ்த அரசாங்கத்தை எதிர்த்துக் கம்யூனிஸ்த விரோதிகள் பலவிதசதிமானச் செயல்களை மும்முரமாக நடத்திவருகின்றார்கள். இவர்கள் அங்கே றெயில்வேய்ப் போக்குவரத்துகளைத்தாக்கிப் பெருஞ்சேதம்விளைத்திருக்கிறார்கள். போக்குவரத்து மத்தியதானங்களிலே பலமான பொலிஸ்பந்தோபஸ்துகள் அமைக்கப்பட்டும் இந்தத்தாக்குதல்கள் நின்றபாடில்லை. சமீபத்தில் செறண்டா எனுமிடத்திலே டான்யூப்நதிக்குமேலாகவுள்ள பெரியறெயில்வேய்ப்பாலம் வெடிவைத்துச் சேதமாக்கப்பட்டமையாலே டான்யூப்–கருங்கடல் றெயின்வண்டிப் போக்குவரத்து நிறுத்தப்படலாயிற்று. அத்துடன் ருஷியாவுக்குச்செல்லும் பிரதானறெயல்வேய்ப்போக்குவரத்துப் பாதையும் துண்டிக்கப்படலாயிற்று.

### பிராஞ்சிய மகினட்அரண்

இரண்டாவது உலகயுத்தத்துக்கு முன் பிரான்சியஅரசு அமைத்த பேரான பாதுகாப்பு அரணாகிய மகினட் அரணைத்திருத்தி மீளவும் பலப்படுத்திஅமைப்பதற்கான திட்டம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அங்ஙனம் அமைக்கப்படுமிடத்து அஃது கிழக்குப்புறத்திலிருந்து நடக்கக்கூடிய படையெடுப்பு அச்சத்தைத் தடுத்துவிடக்கூடிய ஓர்சர்வதேச மகாப்பேரரண் ஆகுமென்று சொல்லப்படுகிறது பிரான்சின் தேசியபாதுகாப்புக்கான செனற்சபைக் கம்மிஷன் தனது அங்கத்தவர்களில் ஒருவரான செனற்றர் செலெய்ற்றர் என்பவரின் அந்தரங்க அறிக்கை ஒன்றைச்சமீபத்திலே வாசிக்கக்கேட்டுள்ளது. மகினட் அரண் வரிசையைச் சுற்றிப்பார்வையிட்டபின் அது முதற்தரமான நிலைமையிலிருக்கத் தாம்கண்டதாக அவர்தெரிவித்துள்ளார். அதனைத் திருத்திச்சொற்பசெலவிலே மீளவும் பலப்படுத்தமுடியுமென்றும், அவ்வாறு செய்வதாலே மேற்கு ஐரோப்பிய பாதுகாப்புத்திட்டத்துக்கு அதனைத் தகுதியாக்கிக் கொள்ளலாமென்றும் அவர் அறிக்கையிட்டிருக்கின்றார்.

## நானா சங்கதிகள்

—அமெரிக்கவரசு சென்றம்காயுத்த காலத்திலே அதிகம்உச்சபடியாக மாதம்ஒன்றுக்குப் 10 கோடியே 24 லட்சம் றாத்தல்நிறையான இராணுவ விமானங்களைக் கட்டியது. இப்போதும்அது இராணுவவிமானங்களைத் தொகையாகக் கட்டத்தொடக்கிச் சென்றபுரட்டாசியிலே 38,23,000 தொன்நிறையான விமானங்களைக்கட்டியிருக்கிறது. முந்திய 1949-ம் ஆண்டின் புரட்டாசியில் அதுகட்டியது 23,15,000 தொன் நிறையான விமானங்களே.

—சோவியற் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து களவாகப் பெருந்தொகையிலே கம்யூனிஸ்த ஏசன்றுகள் இராக்காலத்தில் வருவதைத் தடுத்துவைக்குமாறு மேற்குஜேர்மனியஅரசாங்கம் கிழக்குப்புறமாகவுள்ள ஆயிரம்மைல்நீளமான எல்லைப்புறமுழுவதும் விசேஷ எல்லைப்புறக் காவற்படைகளை அமர்த்தியிருக்கின்றது. இந்தஆயிரம்மைலும் பால்திக்கடலிலிருந்து செக்கோசிலோவாகிய எல்லைவரையில் நீடித்துள்ளது.

—சர்வதேசநிலைமை அபாயகரமாய் இருப்பதாலே மூன்றாவது உலகயுத்தம்ஒன்று திடீரென மூண்டுகொள்ளக் கூடுமாகையால் சிரிய அரசாங்கம் மேலதிகமான வைத்தியபொருட்களையும், யந்திரபகுதிகள்போன்ற மற்றும் ஆவசியகமான சாமான்களையும் இருப்பிலே சேகரித்துவைத்துக்கொள்ள வேண்டுமென்று லண்டன், வாஷிங்ரன், பரீஸ், மஸ்கோ நகர்களிலுள்ள சிரியஸ்தானிகர்கள் அதனைத் தூண்டியிருக்கின்றார்கள்.

—பிரித்தானியபொதுசனபாதுகாப்பு அதிகாரிகள் அடுத்தபன்னிருமாசங்களுக்கிடையிலே அத்தேச முழுவதிலும் 300 பொதுசன பாதுகாப்புநிலையங்களை அமைக்கவிருக்கின்றார்கள். இந்தநிலையங்கள் அணுக்குண்டுப் பாதுகாப்புப் போதனைகளுடன் சம்பந்தப்பட்டனவாய் இருக்கும். பொதுசன பாதுகாப்புச்சேவையில் ஈடுபட்டுள்ள 73,000 தொண்டர்களும் இதற்கான பயிற்சி அளிக்கப்படுகின்றார்கள்.

—மூன்றாவது உலகயுத்தம்ஒன்று மூண்டால்—ருஷியகைத்தொழில் மத்தியஸ்தானங்களைத் தாக்குவது அவசியமென்றுகண்டால்—வடசமுத்திரத்தின் கீழாகச் சப்மறின்களிலே அமெரிக்கபடைகளை எவ்வாறுகொண்டுபோய் இறக்கலாமென்று வடசமுத்திர பேரான ஆராய்ச்சிநிபுணரான சேர் ஹியூபேட் வில்க்கின்ஸ்அவர்கள் விளக்கிக் காட்டியிருக்கின்றார்.

—பேர்ளின் மேற்றிராணியாரான கருதினல் கவுண்ட் வொண பிறேய்சிங் ஆண்டவர்காலஞ்சென்றமையாலே ஜேர்மனி தற்போது இருகருதினல்மார்களையே கொண்டிருக்கிறது. இவர்கள் கொலோன்நகர அதிமேற்றிராணியாரான கருதினல் பிறிங்ஸ்ஆண்டவரும், மூனிச்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் போல்காபர் ஆண்டவருமே.

—தற்போதுதிருச்சபையில் 52 கருதினல்மாரே இருந்துவருகின்றனர். இவர்களில் இத்தாலியைச்சேர்ந்தோர் 19 பேர். பிரான்ஸ், பிரித்தானி, ஸ்பெயின், ஜேர்மனி, அமெரிக்கஐக்கியதேசம் முதலாம் பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் 33. இப்போது கருதினல்மார் திருச்சங்கத்தில் காலியாய் இருக்கும் ஸ்தானங்கள் 18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிரான்சீஸ்குவின்
# மூன்றுஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 26-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடந்தேறும். மாசி மாதம் பின்வரும் தேதிகளில் சகோதரர்கள் பரிபூரணபலன்களை அடையலாம்:— 1, 2, 4, 5, 14, 19, 22, 25. நிபந்தனைகள்: வழமைபோல். மாசி மாதம் 2-ந்தேதியில் பொதுப்பாவமன்னிப்பு இருக்கும். கூட்டத்தின் பின் ஆலோசனைச்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director

## திருநாள் அட்டவணை

தைமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 19 | அர்ச். கனுத்தப்பர் | (சி) |
| சனி | 20 | அர்ச். செபஸ்தியார் | (சி) |
| ஞா | 21 | சத்திரிகை — அர்ச். அஞ்ஞேசம்மாள் | (ஊ) |
| திங் | 22 | அர்ச். விஞ்சேந்தியார் | (சி) |
| செவ் | 23 | அர்ச். இறேமுந்தப்பர் | (வெ) |
| புத | 24 | அர்ச். திமொத்தேயு | (சி) |
| வியா | 25 | அர்ச். சின்னப்பர் மனந்திரும்பிய திருநாள் | (வெ) |

சத்தியவேத
# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
தை மாதம் 18-ந் திகதி

## சமாதானம் வருமா?

எமது நாட்டிலும், மற்றும் சனநாயகசுதந்திரநாடுகளிலும், இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளிற்தானும் மக்கள் யுத்தபீதிகொண்டவர்களாய் மீண்டும் விரைவிலே ஓர் யுத்தம் மூண்டுவிடுமோவென்று அங்கலாய்ப்போடும் வினவிக்கொள்ளுகின்றார்கள். பின்னர் நிகழவிருப்பவைகளை முன்னதாக அறிந்துசொல்வது இயலுங்கருமம் அன்று. ஆனால், ஓர்யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தகுதியான காலம் வந்துவிட்டதென்று ருஷியசோவியற் அரசுசிந்திக்குமிடத்துத்தான் அது வருமென நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், அதிகம் விரைவில் அதுவருமென்று நம்ப இடமில்லை. ஏனெனில், சனநாயகநாடுகள் யுத்தத்தை விரும்பவில்லை. ஆகவே, அதனைத் தடுத்துவைக்கத்தான் அவைகள் தங்களால் ஆனதெல்லாம் செய்துகொண்டுவருகின்றன.

இரும்புத்திரைக்குப் பின்னுள்ள மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை. ஏனெனில், அவர்கள் தங்களைச்சூழவர முந்தியயுத்தத்தால் நேர்ந்தபரிநாசங்களை எங்கெங்குமே இன்னமும் கண்டுவருகிறார்கள். திகிலை விளைக்கும் மகாப்பயங்கர நிலைமைகள்மத்தியில் அவர்கள்உயிர்வாழுகின்றார்கள். அவர்களது நாடுகள் கம்யூனிஸ்தமயமாகியும் அவர்களின் வறுமையை நீக்கவில்லை. பசிக்கொடுமையைப் போக்கவில்லை. ஒருபோதுமே— ஒருகாலுமே வரப்போகாத கம்யூனிஸ்தசுவர்க்கம் வருமென இரவுபகலாக எதிர்பார்த்துப் பலவந்த சகிப்புத்தன்மையோடும், பொறுமையோடும், பசிபட்டினியோடும் இலவுகாத்தகிளிபோல் ஏமாந்துபோகத்தான் கம்யூனிஸம் அவர்களை செய்துவிட்டது. ஆனால், அவர்களும் மற்றவர்களைப்போல மனிதராயிருக்கும்போது யுத்தத்தை விரும்புவார்களா? இல்லை. ஆனால், ருஷியா யுத்தஞ் செய்யத்தான் வேண்டுமென விரும்பிவலோற்காரமாக ஓர்தீர்மானத்தைச் செய்யும்போது அவர்களால் அதைத்தடுத்துவைக்கமுடியுமா? அதுவும் இல்லை. ஆதலால் யுத்தம் எப்போதுவருமென்று சொல்லக்கூடியது ருஷியா அல்லாது மேற்குச்சனநாயக நாடுகளும்அல்ல. ருஷியாவின் சொந்தத் தோழநாடுகளிலுள்ள மக்களும் அல்ல. ஆனல், ருஷியா ஒன்றேயாகும். அதனல் சமாதானம் வேண்டுமென அது விரும்பினல் சமாதானம் உண்டாகும். ஆனல், ருஷியா உள்ளபடியே சமாதானத்தை விரும்புகின்றதா? இல்லை. அதன் செயல்களே அதற்குப்போந்த அத்தாட்சிகளாகும். சனநாயக நாடுகளும் எவ்வளவுகாலம் ருஷியாவின் சதிமானச்செயல்களையும், தந்திரசூழ்ச்சிகளையும் பொறுத்துக்கொண்டிருக்கும்? பொறுமைக்கும் ஒருஅளவுண்டு அல்லவா? அவைகளும் கடைசியாக ஆயுதசுவீகரணஞ்செய்யத் தொடங்கிவிட்டன.

அமெரிக்கவரசினிடம் போதிய செல்வவளம்இருக்கின்றது. தன்னையும் பலப்படுத்திச் சனநாயகநாடுகளையும் பலப்படுத்தக்கூடிய வல்லமை அதற்கிருக்கின்றது. அதனையும், ஏனையசனநாயகநாடுகளையும் கண்விழிக்கச்செய்தது கோறியயுத்தமே. அவைகள் தடைதாமசமில்லாது ஆயுதசுவீகரணஞ்செய்துகொள்ளவழி பண்ணிவிட்டதும் அந்தயுத்தமே. ருஷியாவுக்கு விட்டுக்கொடுக்குமனப்பான்மையை அவைகள்கைவிடப்பண்ணியதும் அந்தயுத்தமே. ஆகவே, யுத்தம் ஒன்று வருமானல், அவைகள் இனித் தயாராகிவிடும். அவைகள் தயாராகுமுன் ருஷியாகருமம்பார்க்க வேண்டுமானல், தாமசமில்லாது உடனேதானே யுத்தத்தில் இறங்கவேண்டும். ஆனல், அதுவும் இப்போது தயாராயில்லை. ஆகவே, ருஷியா ஓரளவில் சமாதானத்துக்கு இணங்கவேண்டும். அன்றேல் தனதுஅழிவைக் காணவேண்டியதுதான். சாம்பிராச்சியபிரதமர்கள் லண்டன்நகர மகாநாட்டில் செய்திருக்கும் தீர்மானம் ருஷியாவின்மனப்பான்மையை விரைவிலே தெளிவிக்குமன்க.

— பம்பாய்நகரிலே "எக்ஸ்றே" கண்களுள்ள தனராஜ் கோகியா என்ற ஓர் சைக்கிள்ஓட்டி இருக்கின்றார். இவர் சென்ற 9-ந் திகதிபிற்பகல் அங்கு தனதுகண்களைக் கட்டிக்கொண்டு தன்னுடைய எக்ஸ்றேக்கண்கள்மூலம் போக்குவரத்து நெருக்கடியான ஹார்ன்பிவீதியில் தனது சைக்கிளை ஓட்டிச்சென்[illegible] தாராம்.

## — நல்லாயன் —
# கிறிஸ்மஸ்—புத்தாண்டு பொன்மலர்

கண்ணையும் கருத்தையும் ஒருங்கேகவர்ந்து, அழகியபொன் மலரேபோன்றுஎழிலிற்சிறந்து பொருளிற்பொலிந்து மிளிர்கின்ற "நல்லாயன்" பொன்விழாப் பொன்மலர் வரப்பெற்றுப் படித்துப் பேருவகை எய்தலானேம். இதன்மேற்புறத்திலே பரிசுத்தகன்னிகையான மரியன்னை தமது இடதுகரத்தால் யேசுபாலகனையும், வலதுகரத்தால் ஓர்செந்தாமரைமலரையும் ஏந்தியவண்ணம் கலைத்தேவியாகக் காட்சியளிக்கும் பாவனையாய், இந்திய ஓவியக்கலைவிளங்கத் திகழும் சித்திரப்படமானது இப்பொன்மலருக்கு நவமணிகள்பதித்தஓர்பொன்முடிபுனைந்ததுபோலாகும். அத்தகைய பெருமையும், இலக்கியமணங் கமழுவதுமான இப்பொன்மலர் கலையரசியாகிய கன்னிமரியாயின்பொன்னடிகளில் முந்தசமர்ப்பித்துக் கத்தோலிக்க தமிழ்மக்களின் கலைஆர்வத்திற்குப் பரிசாக அளிக்கப்பெற்றிருப்பது சாலவும் பொருத்தமாகும். மறைப்பெரியார்களான அபபோஸ்தொலிக்க இன்ரர்நன்சியோ மகாமேன்மைதங்கிய லீயோ கியர்க்கல்ஸ்ஆண்டவர், சென்னை அதிமேற்றிராணியார், தமிழ்ப்பெரியார்களானகவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, அறிஞர் வையாபுரிப்பிள்ளை முதலியோரின் ஆசிகளுடன் இப்பொன்மலர்இதழ் விரியத் தொடங்கியுள்ளது. சேலம்மேற்றிராணியார், மறைப்பண்டிதர் வண. தனசாமிசுவாமிகள், 'இருதயத்தூதன்' ஆசிரியர், 'தொழிலாளன்' ஆசிரியர், 'சவேரியார் ஞானத்தூதன்' ஆசிரியர், 'தமிழ்முரசு' ஆசிரியர், தமிழ்நாட்டுககாண்டேகர், தினமணி உதவிஆசிரியர், பிரசண்டவிகடன் துணைஆசிரியர், சரவணபவானந்தர் முதலாம் குரவர்கள், பிரபலஎழுத்தாளர், கதாசிரியர்களின் அரியகட்டுரைகள், கதைகள், யோகி சுத்தானந்த பாரதியார், கவிஞர் எம். பி. மஸ்கரனேஸ், சரண, வண்டு ஆதியோரின் கவிதைகளும் இந்தமலரைச்சிறப்பித்து, இலக்கியவிருந் தளிக்கின்றன. கருத்துக்கு வாடாமலராக நறுமணம் வீச அறிஞர்கள் உவந்தளித்த எழுத்தோவியங்களைப்போலவே கணணுக்கு விருந்தளிக்கஓவியர்கள் தங்களகைவன்மைகொண்டு அழகுறச்செய்துஉதவிய கவர்ச்சிகரமான அநேகசித்திரப்படங்கள் பலவர்ணங்களிலும் இப்பொன்மலரைப் பொலிந்து விளங்கச் செய்வதாலேயே கண்ணையுங் கருத்தையுமென்று நாம் ஆரம்பத்தில் கூறலானேம். இதில் அடங்கியுள்ள கட்டுரைகளோ, கதைகளோ, கவிதைகளோ ஆழ்ந்த கருத்துகள், சிறந்தபடிப்பனைகளை அகத்தேகொண்டு ஒவ்வொன்றும் ஒவ்வோர் உயர்ந்தநோக்கிலும், இனியபோக்கிலும எழுதப்பெற்றிருக்கின்றமையால் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் பயக்கத்தக்கன. பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாகக்கத்தோலிக்கமக்களும் இதனைக் கண்ணுறுமிடத்துப் பொன்னேபோலும், மதித்தற்கரிய பொக்ஷம்போலும் வரவேற்பார்கள் எனக் காத்திருக்கலாம். இல்லவாசிகசாலைக்கு இஃதுஓர்பொன்மலர்போன்று இருக்குமாதலால் கத்தோலிக்கமக்கள்ஒவ்வொருவரும் இந்தமலரில்ஒவ்வோர்பிரதிபெற்று ஆர்வத்துடன் படித்து நன்மையடைய வேண்டுமென ஆசிக்கின்றோம். தாம் ஆசிரியராகவந்ததுமுதல் ஆயனின் விருத்திக்காக அயராதுழைத்துவருகின்ற வண. ஆ. யோ. அடைக்கலம்சுவாமியவர்கள் இப்பொன்மலரை ஓர்பொன்னின்மலரேபோன்றுவெளிவரச்செய்தபெருமை பாராட்டத்தக்கது. இதன்விலை பிரதிஅணா 12. கிடைக்குமிடம்: 5, ஆர்மீனியன்தெரு, சென்னை. நமக்கு அனுப்பிய பிரதிகளுக்காக நன்றிபாராட்டுகிறோம்.

## சேர் பிரான்சீஸ் சூட்ஸ்
## அவர்களின்
# தேகவியோகம்

பிரபல கத்தோலிக்கபிரமுகராய், இலங்கைக் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் தலைவராய், இலங்கைச்சர்வகலாசாலை நியாயசாஸ்திர கலாசங்கத்தின் அதிபராய், பரிஸ்றராய், கீர்த்திவாய்ந்த சட்டசாஸ்திர பண்டிதராய், மாஜிபிரதம நீதியரசராய் விளங்கியிருந்தவரான செவாலியர் சேர் பிரான்சீஸ் சூட்ஸ்அவர்கள் சென்ற 10-ந் திகதி புதன்கிழமைஇரவு எதிர்பாராதவிதமாய்க்காலஞ்சென்ற துயரசெய்தியானது இலங்கையிலே சாதிசமய பேதமில்லாது எவர்க்குமே மிகுந்ததுயரைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயசு 65. இவர் கொழும்பிலுள்ள பேரான சஞ்சுசையப்பர்கல்லூரி ஆரம்பமானபோது அதிற்சேர்ந்த முதல்மாணவர்களில் ஒருவர். அதிலே இவர் மிகுந்ததிறமையுடன் கல்விபயின்று ஓர்நியாயவாதியாக அரங்கேறிக் கொழும்பிலும், காலியிலும் நெடுங்காலம் பெரிதும் புகழ்ச்சிக்குரியவிதமாய்க் கடமைபார்த்துவந்து பெரும்பிரஸ்தாபம்எய்தலாயினர் அதனல்இவர் சுப்பிறீங்கோட்டு உபநீதியரசர்களில் ஒருவராயும், பிரதம உபநீதியரசராயும், கடைசியாகப் பிரதமநீதியரசராயும் நியமனஞ்செய்யப்பெற்றுத் தமதுதிறம்பாத வழக்குத் தீர்ப்புகள்காரணமாக எல்லோராலும் வெகுவாகக் கொண்டாடப்பெற்றுவந்தார். இவரது தேசசேவைகளைப் பாராட்டி அரசபெருமான் இவருக்குநைற் பட்டமாகிய சேர்ப்பட்டம் சந்மானித்திருந்தார். பிரதமநீதியரசர் பதவியிலிருந்து இளைப்பாறியபின் இவர்சர்வகலாசாலை நியாயசாஸ்திர கலாசங்க தலைவராக நியமனம்பெற்று அப்பதவியையும் கண்ணியமாகவகித்திருந்தார். இவர் அநேகவருடகாலம் இலங்கைக் கத்தோலிக்கஐக்கிய சங்கத்தின் தலைவராயிருந்து, கத்தோலிக்க சமயசுதந்திரங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்காக வீரத்துவத்துடன் அஞ்சாது பணியாற்றிவந்து செய்துள்ள சமயசேவைகளைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் 1947-ம்ஆண்டு இவருக்கு அர்ச். கிறகோரியாரின் நைற்பட்டம் வழங்கியிருந்தார். சேர் சூட்ஸ் அவர்கள் சொற்சுவை, பொருட்சுவை தேங்கச் சொற்பொழிவாற்றுவதில் அதிகசாதுரியம் வாய்ந்தவர். பெரிய விருந்துபசரணைகளிலும், திருமண வைபவங்களிலும் இவரது ஹாஸ்யம் நிறைந்தபேச்சுகள் சபைகளைப் பரிமளிக்கவும், குதூகலிக்கவும செய்துவரலாயின. கடைசியாகத் திருமணவைபவம்ஒன்றில் இவர்பெரிதும் உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருந்தபோது மூர்ச்சித்து விழுந்ததிலிருந்து இவருக்குமரணம்நேரலாயிற்று. இவரது மரணத்தாலே பொதுவாக இலங்கைச்சன சமூகமும், சிறப்பாகக் கத்தோலிக்க சன சமூகமும் ஓர்பெரியாரை இழந்து சந்தாபிக்கிறதெனலாம்.

R. I. P.

## ஸ்ரீமதி அன்னம்மா சின்னப்பு அவர்களின்

# தேகவியோகம்

அச்சுவேலிப் பிரபல உடையாராக விளங்கியிருந்து இளைப்பாறியிருப்பவரான ஸ்ரீமான் வ. சின்னப்பு உடையார்அவர்களின் தர்மபத்தினியாரான ஸ்ரீ அன்னம்மாஅவர்கள் சிலதினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து, காத்திராப்பிரகாரம் சென்ற 10-ந்திகதிபுதன்கிழமை பிற்பகல் காலஞ்சென்றதுயர செய்தியறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 71.

இவர்இளவாலையிலே பிரஸ்தாபம் பெற்ற கருணைகரமுதலியாரின் வழித்தோன்றலான ஸ்ரீமான் வஸ்தியாம்பிள்ளைஉடையாரின் புத்திரியாவர். சம்பத்திரிசியார்கல்லூரி உபஅதிபாயிருந்து இளைப்பாறியிருக்கும் வண. பி. ஏ. ஜோண்சுவாமியவர்களினதும், வண. பி. பிலிப்புச்சுவாமியவர்களினதும், இளவாலைக் கன்னிகாமடத்தைச் சேர்ந்த சங். சிஸ்றர் பிரான்சீஸ்கா அவர்களினதும் சகோதரியாவர். இவர்இற்றைக்கு 52 வருடங்களின் முன்னர் ஸ்ரீமான் சின்னப்புஉடையாரைத் தமதுவாழ்க்கைத்துணைவராகக் கொண்டு "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" எனும் செய்யுள்அடிக்கிணங்க இனிதே இல்லாச்சிரமம்நடாத்தி நான்குபுதல்வர்களுக்கும், மூன்றுபுதல்விகளுக்கும் தாயாராயினர். இவர் தேவபத்தியும், மற்றும் தயை, தருமசிந்தை ஆதியாம் சீரியகுணங்களும் தம்மில் அமைந்தவராய், தமதுநாயகர் தம்முடைய உத்தியோககடமைகளைப் பார்ப்பதிலே அல்லும்பகலும் அயராதுழைத்துவந்த காலத்தில் குடும்பகடமைகளைக் குறைவறக்கவனித்துப் பிள்ளைகளைத் தேவபக்தியிலும், சன்மார்க்கத்திலும் சீராய் வளர்த்து, அவர்களின் கல்விவிருத்தியிலே கருத்தாயிருந்து, நாலாபேரும் மதிக்கக்கூடியவகையிலே அவர்களை மனிதராக்கிவைத்து, அவர்கள் நீரோசையாகவாழக்காணும் பாக்கியத்தையும்அவர்கள் தமதுதிருமணசெம்பொன் யூபிலியைக் கண்டுகளிக்கும் பெரும் பாக்கியத்தையும்பெற்றிருந்தார். இன்னும் தமதுஇனசனருக்கும், அயலவர்க்கும் ஓர்உபகாரியாயிருந்து, அவர்களது வாழ்வு தாழ்வுகளில்கலந்து அவர்கள்எல்லோராலும் நன்குமதிக்கவும்பெற்றுவந்தாரென்பதும் ஈண்டு பாராட்டத்தக்கதாகும்.

இவரின்பிரேதசேமமானது மறுநாள் வியாழக்கிழமைசாயந்தரம்அச்சு

### Ceylon Government Railway

Level Crossing Repairs

The Level Crossing at 69m. 07c. Main Line between Kadugannawa and Peradeniya Railway Stations (Road mileage 66m. 23c. on the Colombo-Kandy Road) will be closed for vehicular traffic as follows for effecting repairs:-

Partially from 7.00 a. m. to 3.00 p. m. on Sunday, 28-1-51.

Totally from 10.50 p. m. on Sunday, 28-1-51 to 2.00 a. m. on Monday, 29-1-51.

Traffic will be assisted over the level crossing during the period of partial closure.

E. C. Wijeyesekera
For General Manager, C. G. R.
P. O. Box 355,
Colombo, 18-1-51

—அர்ச். சின்னப்பர் கிரேக்கநாட்டிற்சேர்ந்த பத்தொன்பதாம்நூற்றாண்டை ஞாபகப்படுத்துமாறு கிரேக்க பிரிவினைக் கிறீஸ்தசபை ஓர் "பரிசுத்தவருடத்தை"க் கொண்டாடுதற்கான திட்டங்களைச்செய்துகொண்டு வருவதாக அதென்ஸ் நகரிலிருந்து கிடைத்தஓர்செய்தி தெரிவிக்கின்றது.

—சீனக்கம்யூனிஸ்த அரசாங்கம் கோறியயுத்தத்தில் தலையிட முதன்மையும், உண்மையுமான நோக்கம் சீனத்தேசிய அரசாங்க தலைவரான சியாங்-கை-ஷெக் அவர்களிடம் எஞ்சியுள்ளபலத்தைநசுக்கிவிடுவதேயென்று யப்பானிய பிரதமரான யோஷிடா கூறுகின்றார். கோறியாவிலே சீனக்கம்யூனிஸ்தரின் நடவடிக்கைகளின் போக்கெல்லாம்தேசிய அரசாங்கத்தின் தீவாணைக் கைப்பற்றுதற்கென்றே அவர்நம்புகின்றார்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பிரேக்நகர குழந்தையேசுவின் பெரும் புதுமையினால் எனது குழந்தைகளும் ஆபத்தானவருத்தத்திலிருந்து மீட்கப்பட்டுப் பூரணசுகம்பெற்றன. அவரின்புதுமையுள்ளகரம் எங்களைவிட்டகலாது வரவிருக்கும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றக் குழந்தையேசுவை வினயமாய் வேண்டுகின்றேன். அவரின்புதுமை பிரபல்யமடைய நேர்த்திப்படி பிரசுரிக்கின்றேன்.

யாழ்ப்பாணம், Mrs. S. E. Joseph

வேலிகண்டிராத அத்துணை பெருஞ்சிறப்பாக நடந்தேறியது. அமங்கல வாத்தியங்கள் முன்னே இசைத்துச் செல்ல, குருசகோதரரான வண. ஜோண்சுவாமியவர்களை முதல்வராகக் கொண்டு பலவிடங்களிலுமிருந்து வந்துகூடிய 22 குருமார் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, அழகிய முதிரைப்பேழையில்வைத்த பிரேதவண்டியின் இருமருங்கும் செவாலியர் எஸ். அருளானந்தம், செவாலியர் சேர் சிற்றம்பலம் காடினர், திரு. எஸ். இரத்தினேசர், அரசாங்கவைத்திய அதிகாரி டக்றர்பசுபதி என்பவர்கள் மகிமைக் காப்பாளர்களாகச்செல்ல, யாழ்ப்பாணப்பட்டணத்திலிருந்தும், மற்றும்பல கிராமங்களிலிருந்தும் வந்துகூடிய உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், பெரியமனுஷர்கள், இனசனர், சிநேகிதர்ஆதியோர் அனுதாபத்துடன் பின்செல்லப் பிரேதமானது அவ்வூர்அர்ச். சூசையப்பர் ஆலயத்தை அடைந்து அங்கே அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியபின் சேமக்காலையில் வண. ஜோண்சுவாமியவர்கள் கடைசிஆசீர்வாதங்கூறிநிற்கப் பூமதானஞ்செய்யப்படலாயிற்று. இவரைஇழந்து துன்புறுகின்ற நாயகரோடும், புத்திரர், புத்திரிகள், சகோதரர், சகோதரி, மருகர்கள், பௌத்திரர்கள், மற்றுமுள்ள இனசனரோடும்நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

# NOTICE TO THE CLERGY

## NATIONAL DAY CELEBRATION

The Reverend Fathers are requested to observe the following programme in connection with the National Day Celebration.

4th Febr. (a) Solemn Mass of Our Lady of Lanka in all the Churches and Chapels;

(b) Special Sermon;

5th Febr. (c) All church bells to be rung "more festivo" at 6.00 a. m.

(d) Benediction of the Blessed Sacrament at 5.00 p. m., and Consecration to the Immaculate Heart of Mary.

15-1-51

✠ J. Emilianus Pillai O. M. I.
*Bishop of Jaffna.*

புத்தக மதிப்புரை

## மாணவர் பூமிசாஸ்திரம்

——:——

### ஐந்தாம் வகுப்புக்குரியது

ஆக்கியோன்: ஆசிரியர் எல். கிறேஷியன், சென்சாள்ஸ் சாதனுபாடசாலை. பிரசுரம்: அர்ச். பிலோமினு அச்சகம், 102, பெரியதெரு, யாழ்ப்பாணம். 56 பக்கங்கள்கொண்டது. பிரதி விலை ரூபா 1 சதம் 15. கிடைக்குமிடம்: B. அக்கேஸ்பிள்ளை, காடியன் ஏஞ்சல் புத்தகசாலை, கரவெட்டி.

இன்றையஉலகில் பொதுவாகப் பாட அறிவுவிளக்கத்துக்குப் படவிளக்கம் முக்கியமாகக்கொள்ளப்படுகிறது. அதனால் இக்காலபாடபுத்தகங்கள் அதிகமானபடங்களைக் கொண்டனவாய்க் காட்சியளிக்கின்றன. படத்தைத்துணையாகக்கொண்டு ஊட்டப்படும்அறிவு பெரிதும்விளக்கமானது, மிகச்சிறந்தது, அதிகம்இலகுவானது என்பது அனுபவஉண்மை. அதிலும் பூமிசாஸ்திர அறிவுசம்பந்தமாய்ப் படவிளக்கம் இன்றியமையாதது. அதனால் மாணவர்கள் தாம்படிக்கும் ஒவ்வோர் பூமிசாஸ்திரபாடத்தையும் படங்களோடு தொடர்புபடுத்திப் படிப்பதற்கு உதவியாகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இஃது உலகப்பொதுவிபரம், உணவுஉற்பத்திசெய்வோர், உடை உற்பத்திசெய்வோர், சக்தி கொடுக்கும் பொருள்கள் எடுப்போர், போக்குவரத்துப் பாதைகள் எனும் ஐந்துபாகங்களாக வகுக்கப்பெற்று, அவற்றிலே 27 பாடங்கள் அடங்கியிருக்கின்றன. இப்பாடங்களுடன் சம்பந்தப்பட்ட படங்கள் அக்கபக்கமாய்அமைந்து, பாடங்களின் விஷயங்களை இனிதேவிளக்கிக் காட்டுகின்றன. அதனால் ஒருபாடத்தைப்படிப்பதற்குப் பலபக்கங்களைத் திருப்பவேண்டிய அவசியமில்லை. மேலும் ஒவ்வோர்பாடத்தின் முடிவிலும் தரப்பட்டிருக்கும்பயிற்சிகளும், செய்கைகளும் மாணவர்கள் அந்தந்தப் பாடங்களிற் பெற்றஅறிவை நன்குஸ்திரப்படுத்தக்கூடியன. யுத்தத்தின்பின் உலகிலே அரசியல்-பொருளாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கும்மாறுதல்களை மாணவர்கள் அறிந்துகொள்ளும்படியாக விஷயங்கள் வேண்டியவிடத்துத் தற்காலத்தையொட்டியனவாய்த் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் பாடங்களில்வரும் விஷயங்களுக்குரிய ஆரம்பஅறிவை மாணவர்கள்பெற்று அதிகம் பயன் அடையுமாறு இந்நூலின் கடைசியிலே "பூமிசாஸ்திரப் பொதுஅறிவு" எனும்பகுதி தரப்பட்டிருக்கிறது. அதிகமானதேசப்படங்கள், விளக்கப்படங்கள், காட்சிப்படங்கள், உருவப்படங்களுடன் ஐந்தாம்வகுப்பு மாணவர்களுக்கு வேண்டியபூமிசாஸ்திர அறிவை இலகுவாகவும், தெளிவாகவும் ஊட்டக்கூடியவகையிலே இந்நூலைப் பெரிதுஞ் சிறப்பாக ஆக்கித்தந்திருக்கும் ஆசிரியர்க்குத் தமிழாசிரியஉலகம் மிகவும் கடமைப்பாடுடையதுஎன்க. ஆகவே, அவர்கள் இந்நூலை

புத்தக மதிப்புரை

## "இலக்கண விளக்கமும் பாஷைப்பயிற்சியும்"

——:——

ஆக்கியோன்: ம. வஸ்தியாம்பிள்ளை, தலைமைஆசிரியர். நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக் குரியது. பதிப்பாளர்: சண்முகநாத ஸ்டோர்ஸ், நீர். 70. மெயின்வீதி, மஸ்கேலியா. பிரசுரம்: கொழும்பு, இந்தோ சிலோன் பிறின்ரேர்ஸ் லிமிற்றெட். 93 பக்கங்கள் கொண்டது. விலை பிரதி ரூபா 1 சதம் 25. கிடைக்குமிடம்: B. அக்கேஸ்பிள்ளை, காடியன் ஏஞ்சல் புத்தகசாலை, கரவெட்டி.

மனதில் எழுகின்ற எண்ணங்களைப் பிழையறத் தமிழில் பேசவும், எழுதவும் இளம்மாணவர்களைப் பயிற்ற வேண்டுமென்ற நோக்கங்கொண்டு ஆக்கப்பட்டுள்ள "இலக்கண விளக்கமும் பாஷைப்பயிற்சியும்" என்ற இந்நூலானது எழுத்து, சொல், பெயர், திணை, பால், எண், இடம், காலம், வினை, முற்று, எச்சம், வாக்கியம், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், இடைச்சொல், வேற்றுமை ஆதியனவற்றை முப்பதுபாடங்களாக வகுத்து, ஒவ்வொன்றுக்கும் நல்லவிளக்கங்கொடுத்து, அநேகபாடப்பயிற்சிகளையும், மற்றும் சிறந்த பல பயிற்சிகளையும் அளிக்கின்றது. இப்பயிற்சிகள்மூலமாக மாணவர்கள் தாமாகவே வசனங்களை ஆக்கவும்; சொற்களின் பொருளை அறியவும், பிழைகளைக் கண்டுதிருத்தவும், பொருத்தமானசொற்களை வசனங்களிடையே புகுத்தவும், பற்பல விஷயங்களைப்பற்றிச் சிறியசிறிய வாக்கியங்கள், மற்றும் சின்னச்சின்னக் கதைகள் எழுதவும், பொதுவாகச் சொல்லுமிடத்துத் தங்கள் வகுப்புகளுக்குரிய இலக்கணத்தை இலகுவிலே கற்றுக்கொள்ளவும் கூடியோராவார்கள். இன்னும் இப்பாடப்பயிற்சிகள் இலக்கணஅறிவிலே மாணவர்களைப் பயிற்றுவதுடன், அவற்றிலே காணப்படும் அருமையானமுதுமொழிகள், பிறஅனுபவங்கள்யாவும அவர்களுக்குச் சிறந்த ஒழுக்கப்பயிற்சியையும் அளிப்பனவாகும. இலக்கணபாடம் ஓர் இலகுவானபாடமன்று. ஆனால், இதன்ஆக்கியோன் ஆசிரியத்தொழிலில் தமக்குள்ள அனுபவத்தைக் கொண்டு நன்குஆராய்ச்சிசெய்து, சிறுவரைக் கவரக்கூடியவிதமாய், இக்காலப் பரீட்சைக்கேற்றமுறையாய், ஆசிரியர்களின்வேலையை இலகுவாக்கும்வகையாய் இதனைஎழுதியிருப்பது பாராட்டத்தக்கது. ஆகவே தமிழாசிரியஉலகம் இதனை நன்குஆதரித்து, ஆக்கியோன் இன்னும் பல நூல்களை எழுதிவெளியிட அவரைஊக்கப்படுத்திவிடுமென நம்புகிறோம். நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி பாராட்டுகின்றோம்.

நன்குஆதரிப்பார்களென நம்புகிறோம். நமக்குஅனுப்பிய பிரதிகளுக்காக நன்றிபாராட்டுகிறோம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுதந்திர உலகம் பலப்படவேண்டும்

# பிரசாதிபதி ட்றூமனின் செய்தி

வாஷிங்ரன்— தை 10.

பிரசாதிபதிட்றூமன் அவர்கள் அமெரிக்ககாங்கிரசுக்கு (பிரதிநிதிகள்சபை) நேற்றுமுன்தினம் விடுத்தசெய்தி வருமாறு:—

82-வது காங்கிரசுக்கு மகத்தான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் நடவடிக்கைகளை உலகமுழுவதும் கவனிக்கும். இப்போது அமெரிக்காவின் சுதந்திரவாழ்க்கைமுறைக்கே பயங்கர சவால் விடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச்சவாலைச் சுதந்திர சனநாயகமக்கள் எங்ஙனம் சமாளிக்கப்போகிறார்கள்? அவர்களுடையவல்லமை எம்மட்டும் இருக்கிறது? என்பது காங்கிரஸ் நடவடிக்கைகளிலிருந்து தெரியும். இந்தச்சவாலை நமதுப்பரம்பரைப் பண்பாட்டுக்குப் பெருமைதரும்வகையிலே அமெரிக்ககாங்கிரஸ் சமாளிக்கும் என்பது எனக்குத்தெரியும்.

நமது நாடு திடமானநிலைமையில் இருக்கிறது. அதைஅறிவிக்க நான் மகிழ்ச்சியடைகிறேன். நமது சனநாயகஸ்தாபனங்கள் செவ்வனே இயங்கிவருகின்றன. உலகில் மற்றெந்த நாட்டைக்காட்டிலும் அதிகமான உற்பத்திகளை அமெரிக்காசாதிக்கக்கூடிய உயரியநிலைமையில் இருக்கிறது. அது தனக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பைச் சீராகநிறைவேற்றுமென நான் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறேன். நாம் வெற்றிபெறுவது திண்ணம். அதற்காக அனைவரும் தத்தம்கடமைகளைப் பூரணமாகச்செய்யவேண்டியது அத்தியாவசியம்.

## அமெரிக்க போர்வீரர்கள்

கோறியாவிலே கடும்போராட்டத்தில் அமெரிக்கவீரர்கள் இன்று ஈடுபட்டுள்ளனர். அவர்களதுவீரத்திற்கும், விசுவாசத்திற்கும், வல்லமைக்கும் மரியாதைசெலுத்துகின்றோம். ருஷிய கம்யூனிஸ்த சர்வாதிகாரம் உலகம்முழுவதையும் சிறுகச்சிறுகக் கபளீகாம் செய்ய முயற்சிக்கிறது. அதன் ஓர் அம்சமே அதுதூண்டியுள்ள கோறிய ஆக்கிரமிப்பாகும். ருஷியாவின் இந்தச்சூதுவாதுகள் கோறியாவிலே ஐ. நா. தோழநாடுகளுடன் தோள் பொருத்திப்போராடும் அமெரிக்கவீரர்களுக்கு நன்றாகத்தெரியும்.

பிறந்தநாட்டிலிருந்து நெடுந்தூரஞ் சென்று போராடிவரும் அமெரிக்க வீரர்கள் நம்முடையஉயிரையும், சுதந்திரங்களையும் காப்பாற்றவே போராடிவருகிறார்கள். இன்றுநாம் இங்கு சுதந்திரமாகவாழும் உரிமைக்காக — நம்மைநாமே ஆண்டுகொள்ளும் சுயேச்சை படைத்திருப்பதற்காக அவர்கள் போராடிவருகிறார்கள்.

சோவியற்ருஷியாவின் உலகஆதிக்க பேராசையினால் விளைந்துள்ள நெருக்கடியானது நமதுசுதந்திரங்களை அழிக்கப்பார்க்கிறது. மனிதன் தன்னிஷ்டத்தோடும், தன் மானத்தோடும் வாழக்கூடியஉலகையே சோவியற் ருஷியா அழிக்கமுயல்கிறது. இந்தப் பயமுறுத்தற் பயங்கரசவால் நமக்கு மட்டுமல்ல, சுதந்திரஉலகுக்குமே பொதுவானது.

## அலட்சியமாயிருக்க முடியாது

சுதந்திர உலகம் முழுவதையுமே சோவியற் அரசு பயமுறுத்துகிறது. "யாருக்கோ ஆபத்துவந்துவிட்டுப் போகிறது; நமக்கென்ன?" என்று எந்தச்சுதந்திரநாடும் அலட்சியமாகச் சும்மாவிருக்கமுடியாது. அப்படிச் சும்மாவிருந்துகொண்டு, தனக்குமட்டும் சுகமும், சுவர்க்கமும் தேடிக்கொள்ளலாமென யாருஞ்சுயநலமாக நடக்கவும்முடியாது. சுதந்திரநாடுகளுக்கு ஆக்கிரமிப்புநோக்கங்கள் எதுவுமேகிடையாது. உலகில் சமாதானம் தழைத்திருக்கவேண்டும் என்பதுவே அமெரிக்காவின்விருப்பம். நம்முடைய திட்டங்களில் எந்தநாட்டின் பந்தோபஸ்தையும் பயமுறுத்தக்கூடிய சூதுவாதுகள் துளிகூடஇல்லை. ஐ. நா. தர்மசாஸனம் அளிக்கும் உத்தரவாதப்பிரகாரம், தானும்வாழ்ந்து பிறரையும் வாழவிடும் என்று சோவியற்அரசை நம்பியிருந்தோம். ஆனல், சோவியற் அரசுபோகும்போக்கு நமது நம்பிக்கையைக் குலைத்திருக்கிறது.

சோவியற்அரசின் இன்றைய எதேச்சாதிகாரப்போக்கு ருஷிய ஸார் சக்கிரவர்த்திகாலக் கொடுங்கோலைக்காட்டிலும் மிகமிக மிதமிஞ்சியிருக்கிறது. சோவியற்அரசின் மண்ணாசைக்கு ஈடுஇணையே காண்பதற்கில்லை. உலகில் சுதந்திரத்தைஅழித்துத் தன்னுடைய ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த ருஷிய கம்யூனிஸ்தர்கள் இரண்டுவழிகளைக் கைக்கொள்ளுகின்றனர். (1) உள்நாட்டுக்கலகத்தையும், சதிவேலையையும் தூண்டுவது. (2) வெளியிலிருந்து ஆக்கிரமிப்புப்படைகளை ஏவிவிடுவது. இவ்விருவழிகளின்மூலம் கம்யூனிஸ்த ருஷியா தனதுசெங்கோலை உலகம் முழுவதிலும்செலுத்த முனைந்திருக்கிறது. இவ்விரண்டுக்கும் பூர்வாங்கமாக, வர்க்கப்போராட்டத்தையும், அராஜகக்குழப்படிகளையும் அவர்கள் தங்கள்சதிகாரத் தோழர்கள் மூலம் தீவிரப்படுத்துகின்றனர். கம்யூனிஸ்தர்களின் சதிவேலைகளுக்கும், விஷங்கக்கும் பிரசாரத்திற்கும் ருஷியா ஊக்கமளிக்கிறது. பொருளாதாரமுன்னேற்றத்திற்குக் கம்யூனிஸ்தர்கள் வழிவிடுவதில்லை. சோவியற்அரசின் முன்சொன்ன இருவகைச்சூதுகளையும் சமாளிக்கச் சுதந்திரஉலகத்தவராகிய நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். அதன்சதிகாரத்திட்டங்களை முறியடிக்கும்ஆற்றல் சுதந்திரஉலகத்திற்கு நிச்சயமாயிருக்கிறது. நம்மிடம் சக்தியும், சாமர்த்தியமும், கைத்தொழில் மேன்மையும், உற்பத்தித்திறனும், எல்லாவற்றிற்கும்மேலாகச் சுதந்திர வேட்கையும் இருக்கின்றன. இவற்றின்முன் சோவியற்எதேச்சாதிகாரம் நின்று பதில்சொல்லமுடியாது.

## பொருளாதார உதவியைப் பெருக்குவது

எல்லாநாடுகளும், மக்கட்குலம் முழுமையும் சுதந்திரமாயிருக்கவேண்டுமென்பதே நமதுலட்சியம். சட்டத்தையும், ஒழுங்கையும் முறையாகக் கொண்ட சமாதானஉலகம் ஏற்படவேண்டும். அதன்பொருட்டே ஐ. நா. ஸ்தாபனத்தை நாம்அடிகோலியுள்ளோம். அமெரிக்காவின் தேசிய பந்தோபஸ்தும், சுதந்திரஉலக நாடுகளின் பந்தோபஸ்தும் ஒன்றுகப் பின்னிக்கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு நம்முடையஆதரவும், நமக்கு அவைகளதுஆதரவும் பரஸ்பரம் அவசியப்படுகின்றன.

மேற்கு ஐரோப்பா சோவியற்அரசின்வசப்படுமாகில், அது சோவியற் அரசுக்கு நிலக்கரிஉதவுதலை இரட்டிக்கச்செய்யும். உருக்குஉதவுவதை மும்மடங்காக்கும். ஆபிரிக்காவும், ஆசியாவும் ருஷியாவிடம்சிக்கினல், நமக்கு மூலப்பொருட்களின்வரத்து தடைபட்டுப்போகும். அம்மாதிரிநிலைமைக்குச் சோவியற்அரசு யுத்தத்தில்இறங்காமலேயே தனதுசர்வாதிகாரத்தைக் கெடுபிடிசெய்யச் சந்தர்ப்பம்கிடைக்கலாம். எனவே, சுதந்திரஉலகுக்கும், நமக்குமுள்ளபிணைப்பை ஒருநாளும் நாம்கைவிடக்கூடாது. சுதந்திரஉலகில் நம்மிடம் ஆகச்சிறந்தஆற்றல் திரண்டிருக்கிறது. இதில் நமக்கு மகத்தானபொறுப்பு இருக்கிறது. நமதுபொறுப்பு, சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள சவாலையேற்றுப் பயமுறுத்தலைக் களைவதேயாகும். அதற்கு நம்மிடம்உருப்படியான, அனுபவசாத்தியமான வேலைத்திட்டம் இருக்கிறது.

நாம்ஐரோப்பாவில் மாஷல்திட்டத்தைச் செயற்படுத்தினேம். அதனல் அளப்பரியபலன்கள் உண்டாயின. இத்தாலியிலும், பிராஞ்சிலும், மஸ்கோ ஏசன்றுகள்முயற்சித்த வேலைநிறுத்தங்கள் படுதோல்வியடைந்தன. அமெரிக்காஅளித்த பொருளாதார சகாயத்தின்பயனய் மேற்குஐரோப்பா முழுவதிலும் கம்யூனிஸ்தர்கள் தேர்தல்களிலே தோல்விக்குமேல் தோல்விகள் அடைந்தனர். ஐரோப்பாவுக்கு நாம் தொடர்ந்து ஏராளவு குறிப்பிட்டஇனங்களுக்காகப் பொருளாதாரசகாயம் வழங்கிவரவேண்டும்.

உலகிலுள்ள மற்றப்பாகங்களுக்கு விரிவானஅடிப்படையில் அமெரிக்கா பொருளாதாரசகாயம் செய்துவரவேண்டும். ஆசியாவிலும், மற்றப் பாகங்களிலும் மக்களின் வறுமையை அகற்ற நாம்உதவவேண்டும். சுதந்திர உலகை இச்செய்கை மேலும் பலப்படுத்தும்.

## இராணுவ உதவி

தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளவிரும்பும் நாடுகளுக்கு நாம் தொடர்ந்து இராணுவசகாயம்அளித்துவரவேண்டியது இரண்டாவது வேலைத்திட்டமாகும்.

நமது பாதுகாப்புத்திட்டத்தின் கேந்திரமானது வடஅத்திலாந்திக் பாதுகாப்புஆகும். தார்மீகத்துறை, பொருளாதாரம் எந்தவகையில்நோக்கினும், ஐரோப்பாவைப் பாதுகாப்பது நம்மையே பாதுகாத்துக்கொள்வதற்கு நிகராகும். நமது வடஅத்திலாந்திக் ஒப்பந்தகூட்டாளிகள் நம்முடையதைக்காட்டிலும் பெரியபடைப்பலத்தை மும்முரமாக நிறுவிவருகின்றனர். நாங்கள்எல்லாரும் ஒன்றுசேர்ந்து தற்காப்புத்திட்டங்கள் வகுத்திருக்கிறோம். அவற்றைச் செயற்படுத்த நமதுமகத்தான இராணுவ தலைவர்களில்ஒருவரான ஜெனறல் ஐஸன் ஹோவர்அவர்களைச் சென்றவாரம் நாம் பரிஸ்நகருக்கு அனுப்பியுள்ளோம். அவரது பராக்கிரமத்திலே ஐரோப்பியமக்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அவருக்கு நாம் பரிபூரணஆதரவு அளிக்கவேண்டும்.


## ஆசியமக்களின் சுதந்திரம்

ஆசியமக்கள் சுதந்திரமாயிருக்கவேண்டும்என்பதே நமது பேரவா. அதற்கு நமதுசரித்திரமே சான்று பகருகிறது. இந்தியா, இந்தோனேஷியா முதலியநாடுகளுடன் நாம் கொண்டுள்ள தொடர்புகளே நமது நேர்மையானபோக்கிற்கு அத்தாட்சிகள்.

ருஷியா தூரகிழக்குநாடுகளைத் தனதுகுடியேற்றநாடுகளாக்க முற்பட்டிருக்கிறது. தூரகிழக்கில்தான் — கோறியாவிலே ஐ. நா. தலைமையில் நாம் சுதந்திரத்தைக்காப்பதற்காகப் போராடிவருகிறோம். கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புப்படைகள் கோறியாவை அடிமைப்படுத்துவதைத்தடுக்க நாம் போராடிவருகிறோம். கோறியாப் போராட்டம் சுதந்திரஉலகிற்கு முக்கியமானது. ஆக்கிரமிப்புக்கு எதிராகச் சுதந்திரஉலகம் ஒன்றுதிரண்டிருப்பதையே இதுகுறிக்கிறது.

ஆக்கிரமிப்பை முளையிலேயே கிள்ளியெறியவேண்டும். பழையசரித்திரத்தைப்பாருங்கள். 1931-இல் மஞ்சூரியாவுக்கும், 1935-இல் எத்தியோப்பியாவுக்கும், 1938-இல் ஆஸ்திரியாவுக்கும் எதிராகஉண்டுபட்ட ஆக்கிர

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)


Osram

REGD. TRADE MARK

# ஒஸ்றம்

## அற்புதமான லாம்பு

கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.

## வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.

கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லின்டுலா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடவைக் கயிறு

( கத்தோலிக்க சிறுகதைப்போட்டியில் முதற்பரிசுபெற்றது ).

"எந்தப்பேச்சை? 'கோயிலுக்குப் போய்வருகிறேன்' என்று நான்உங்களிடம் பணிவுடன்கேட்பதைத்தானே? யாரும் என்சமயஉரிமையைப் பிடுங்கிக்கொள்ள நான் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டேன்." இதுஅவள்.

"சீ! மூடுவாயை. என் இஷ்டத்துக்குமாருக இனிஎதுவும்நடக்காது." இதுஅவன்.

"வாயைநான் மூடிக்கொள்ளுகிறேன். உங்கள்இஷ்டத்துக்குமாருக நான் நடந்ததில்லை. நடக்கப்போவதுமில்லை. ஆனல், கடவுளைத்தொழும் விஷயத்தில்மட்டும் தாங்கள் என்கணவர் என்றாலும் உங்கள்வார்த்தையை மீறவேண்டிவந்தால்···"

"ஓஹோ! இது தான் உங்கள் கோவில்களில் அவர்கள்பிரசங்கிக்கிற லட்சணமோ?"

"லட்சணத்திற்கென்ன? ஒருகாரணமும்இல்லாமல் தான்பிடித்தமுயலுக்கு மூன்றேகால்என்று சாதிப்பவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறைஇதுதான். நான்கோவிலுக்குப் போவதால் உங்களுக்கென்னதீமை? சினிமாவுக்குமட்டும் என்னைவாவா என்று அழைக்கின்றீர்கள். சினிமாக் கொட்டகையைவிடக் கோவில்என்ன குறைச்சல்?"

*　　*　　*

இரத்தினம் நல்லஅழகன். இளவயது. பணக்காரக்குடும்பம். ஆனல் அவன்நாஸ்திகன். கண்டவையன்றி மற்றவைஇல்லை, அவற்றில்உண்மையே இல்லைஎன்பது அவன்கட்சி.

இளமையிலேயே வேதானுசாரத்தில் பற்றுக்கொண்டவள் கமலா. இரத்தினத்தை அவள் நன்ருகஅறிவாள். அவனுடைய வசீகரதோற்றத்தில் அவள்உள்ளம் சிறைப்பட்டுக் கிடந்தது.

'ஆனலும், என்னதான் அழகு, குணம், நிலைமைஇருந்தாலும் அவன் ஒருநாஸ்திகன்தானே' என்று எண்ணும்போதுதான் அவள்மனம்பதறும். ஒருபக்கம்கடவுள்; மறுபக்கம் காதலன். காதலனுக்குக் கடவுளே ஆகாதென்றால் அவளும் கடவுளை மறக்க வேண்டியதுதானே. கடவுளின் அன்பை அவள்அறிவாள். தன்காதலனின் அன்பையும் உணர்ந்தாள். இரண்டையும் எப்படிப்பொருத்துவது?

அன்றிரவு சாப்பாடு, குடும்பசெபம், எல்லாம் முடிந்தபின் வழக்கம்போல் கமலா தன்படுக்கையருகே செபித்துக்கொண்டிருந்தாள். "கமலம்" என்று அழைத்தபடியே வந்தாள் தாயார்.

"ஏனம்மா?"

"இல்லை கமலா, பெண்ணைப்பெற்ற எனக்குக் கவலைஇருக்காதா? உன்னைச் சீரும்சிறப்புமாக நான் காண வேண்டாமா?...அந்த இரத்தினத்துக்கு உன்னைக்கேட்கிருர்கள். உன் சம்மதத்தைக்கேட்டுச் சொல்வதாக நான்கூறிவிட்டுவந்தேன் ... உன்விருப்பம்..."என்று இழுத்தாள்.

கமலாவின்உள்ளம் ஆனந்தநிறைவால் குலுங்கிற்று. ஆனல் அடுத்த நிமிஷமே அதுமாறிவிட்டது. இரத்தினத்தைஇழப்பதா? அவர்காதலை மறப்பதா?···என்றாலும் நாஸ்திகன் நாஸ்திகன்தானே! ஐயோ! கடவுள் இல்லையென்று நினைக்கவும் என்மனம் பொறுக்குமா?.. வேண்டாம். ஏன் நான் வெறுமனே இருந்துவிடக் கூடாது....ஆனல், அவரின்கதி என்னவாகும்? நான்தான் அவர்இல்லாமல் எப்படி வாழமுடியும்?...என்றாலும் என்இறைவனின் நித்தியகாலஅன்பை இழக்க நான்துணியலாமா? — நினைவலைகள் ஒன்றையொன்று எதிர்த்து மோதிக் கொந்தளித்தன. சிந்தனை ஓரேசிந்தனை!

"என்னம்மா சொல்லுகிறாய்? உன் தந்தையும் உன்பதிலைக்கேட்டுத்தான் வேறுகாரியங்கள்செய்ய உத்தேசித்திருக்கிருர்" என்றாள் தாயார்.

"அம்மா யோசித்து நாளைக்காலை சொன்னல் போதாதா"என்று கமலா பேச்சைமுடித்தாள்.

கண்அயரஅயர ஒரேயொரு நினைவுதான் மிஞ்சியது. "பிற்காலத்திலும் இதேகுணந்தானே அவரிடம் இருக்கும்! அவருக்காக என்னைவேண்டுமானல் முழுவதும்பலியிட நான் துணிவேன்; ஆனல், என் இறைவனைப் பலியிட நான்யார்?"...

மறுநாள்காலையில் "அம்மா அவரை நான் மணந்துகொள்வதில் எனக்கு விருப்பந்தான். ஆயினும் அதற்குமுன் அவர் அந்தநாஸ்திககூட்டத்தைவிட்டு விலகவேண்டும். நல்லகத்தோலிக்கராக வாழ்க்கையை மாற்றவேண்டும்" என்று உறுதியாகக் கூறிவிட்டாள். கமலா "எந்தவிதத்திலும் இந்தவரம் எனக்குக் கிடைக்கவேண்டும் தாயே" என்று அவள்மனம் அமைதியோடு வேண்டிற்று. "உள்ளன்போடு அவர் என்னைக்காதலிப்பாரானல் அதை இப்போது பார்த்துவிடலாம்"என்ற எண்ணத்தில் அவள்மனம் புதுக் குதூகலத்தையும், சாந்தியையும்பெற்றது.

இரத்தினம்விஷயத்தை அறிந்தான். 'என்னபேதமை! கடவுளாவது கடவுள் ...என்றாலும் பெண்ணல்லவா? அதனால்தான் அப்படி?...என் என்வாழ்வின் லட்சியம் அவள்தான். அதைப் பெற நான் என்மனக்கொள்கைகளைத் தியாகஞ்செய்தால்தானென்ன? ... மடையன்! ஒருபெண்ணுக்கு அடிமைப்பட்டு உன்மனச் சுதந்தரத்தை விற்கப்போகிறாயா? ...என்ன ஆனாலும் அவள் என்வாழ்வின் திலகம். அவள் இல்லாமல் நான்வாழ முயல்வதுவீண்.

இப்போது ஊரெல்லாம் இரத்தினத்தைப்பற்றி ஒரேபேச்சு. "என்றாலும்பாரேன்! அவ்வளவுதிடசித்தம்ஒருவனுக்குஇருந்தால் இப்படித்தான் வாழ்க்கையையே இவ்வளவு துரிதத்தில் மாற்றக்கூடும்!" என்று எல்லோரும்பேசிக்கொண்டார்கள். இரத்தினத்தின்புகழ் எட்டுத்திக்கிலும் எதிரொலிப்பதுபோல் இருந்தது அவளுக்கு.

கமலாவின்மனோரதம் நிறைவேறியது. மங்களமாகத் திருமணம்நடந்தது. இன்பப்படகில் இருவரும் ஏறினர்.

இரத்தினம்தன் மனைவியை அன்போடு நடத்தினன். செல்வமாகவைத்திருந்தாள்என்றே சொல்லவேண்டும். அவளைக்கரும்புஎன்று கூப்பிடுவான் ஒருநாள். மறுநாள்தேனேஎன்று அழைப்பான். இந்தவாழ்க்கைக்கு எல்லையே கிடையாது என்றதுபோல் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தனர்.

முதல் ஆறுமாதகாலத்திலும் அவர்கள்அன்பு கொடியாகவளர்ந்து தழைத்திருந்தது. தழைஎன்றிருந்தால் அதில் சருகு இல்லாமலா போகும்? இந்த ஒருவிஷயத்தையும் கமலா தன்கணவனிடம் கவனித்தாள். அவன் தன் பழைய நாஸ்திகநூல்களுடன் உறவாடுவதை இன்னும் விட்டுவிடவில்லை. நேரப்போக்குக்காக அவன் அவற்றுடன் கொஞ்சிக்கொண்டேயிருப்பான். ஆனல்இதைப்பற்றி அவள்ஒன்றும் பேசவில்லை. பேச அவ்வளவுஅவசியம் இப்போதுஇருப்பதாக அவள் கருதவில்லை.

"இப்பொழுதெல்லாம் அவர் முன்போல் இல்லையே" என்ற எண்ணம் அவளைஅறியாமலே கமலாவின் உள்ளத்தில் வேரூன்றிவந்தது. அதற்கும் காரணம் இல்லாமலல்ல. முன்பெல்லாம் வீட்டில் இருவரும்சேர்ந்து செபமாலைசொல்வது வழக்கம். இப்போதோ அவன் ஏதாவது நொண்டிக் காரணங்கூறிவிட்டு ஒதுங்கிக்கொள்ளுகிறான். ஞாயிற்றுக்கிழமைப்பூசைக்கு எழுப்பினல் தலைவலியென்றோ, கால்வலியென்றோ கூறிக் கழித்துவிடுகிறான். ஆயினும் கமலா தினசரி பூசைக்குப்போவதைமட்டும் அவன் தடுக்கவில்லை.

காலம் சுழன்றது. தனதுவாழ்க்கையின் திலகமாகியகமலாவை அவன் முன்போல் கரும்பே தேனேஎன்று தாரகமந்திரம்போல் அழைத்துக் கொண்டிருப்பதில்லை. தனதுஉள்ளத்தின் இராணியாகவிளங்கிய கமலா செய்வதெல்லாம் முன்னையைப்போல் எப்போதும் தித்திப்பாகஇல்லை. "ஏன் கமலா கோழிகூவும் நேரத்திலேயே எழுந்திருந்து நீகோவில்குளமென்று ஓடுகிறாய்? உன்கஷ்டம் என்கஷ்டமல்லவா?" என்றுஇரத்தினம் தனது நாஸ்திகத்தைக் காதல்பாஷையில் பொதிந்து வெளியிட்டான்.

"ஐய, எனக்குஅதில் ஒரு கஷ்டமும்இல்லையே! நீங்கள் நினைத்தது தப்பு!"என்றாள் கமலாகொஞ்சலுடன்.

"என்னவோ எனக்கென்றால் அதில் துளிகூட இஷ்டமில்லை"என்ற அவன் குரலில் வெம்மை கலந்திருந்தது.

"நீங்கள்சொல்வது அழகுதான்! அப்போதுநாஸ்திககூட்டத்தில் சேர்ந்திருந்தீர்களே, அந்தப்பழக்கமோ?" இரத்தினம் பதில்பேசவில்லை.

( தொடரும் )

## பிரசாதிபதி ட்றூமனின் செய்தி

( 6-ம் பக்கத்தொடர்ச்சி )

மிப்புகளை உடனுக்குடனே அடக்கச் சுதந்திரஉலகம் ஒன்று திரண்டிருக்குமேயாகில், சரித்திரத்தின்போக்கே மாறியிருக்கும். எந்தக் கொள்கைகளுக்காக நாம் கோறியாவில் போராடுகின்றோமோ அவைகள் நீதியும், நேர்மையும் ஆனவை. நீதியும் நேர்மையும் உலகிலேநிலைபெற நாமும், சுதந்திர உலகமும் விட்டுக்கொடுக்காமல் பாடுபடவேண்டும்.

### கண்ணியமான உடன்பாடு

சர்வதேசதகராறுகளைச் சமாதானமானமுறையிலே தீர்க்கும் பணியில் நாம் தொடர்ந்து ஈடுபட்டுவருவோம். அதுநமது மூன்றாவதுவேலைத்திட்டம். ஐ.நா. ஸ்தாபனத்தை நாம்தொடர்ந்து ஆதரித்துவருவோம். சோவியற்அரசின் கண்ணியமான உடன்பாட்டைக்காண நாம் எக்காலத்தும் தயார். ஆனல் அதற்காகத் தாஜாபண்ணுவதோ அல்லது பணிந்துபோவதோ நம்மிடம் இல்லை.

சோவியற்அரசு உண்மையை உணர்ந்து, தனதுமண்ணாசையை விடச்செய்வதற்கு நம்முடைய பலத்தை அதிகரிக்கச்செய்வதுஒன்றே வழி. நாம் பலவான்களாக விளங்கினால், சோவியற்அரசு தனது எதேச்சாதிகாரத்திட்டங்களைச் சுருட்டிக் கொண்டு அடங்கிப்போகும். அப்படித்தான் நடக்கப்போகிறதென்று நம்புகிறோம். சோவியற்அரசை அடக்கவொடுக்கமாக நடந்துகொள்ளச் செய்யத்தக்க சூழ்நிலைகளைஉண்டுபண்ணவே நாம்முயலுகிறோம்.

### சமாதானத்திற்குப் பாதை

நாம் நமதுநாட்டில் மூவகைப் படைப்பலங்களையும் தீவிரமாகப் பெருக்கிவருகிறோம். இப்போது நாம் நவீன இனமான ஜெற் விமானங்களையும், தாங்கிகளையும், B. 36 போன்ற விமானங்களையும் தயாரித்துவருகின்றோம். இந்தத்தற்காப்புமுஸ்திப்புகளை நாம் துரிதமாகவும், நமதுஉள்நாட்டுப் பொருளாதாரத்திற்குச் சீரானமுறையிலும் செய்யமுற்பட்டுள்ளோம்.

கம்யூனிஸம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு உலகைவாட்டிவதைக்கும் என்பதுதெரியாது. ஆகவே, நமது பொருளாதாரஅமைப்பு நெடுங்காலத்திற்குப்பத்திரமாயிருக்கத்தக்கவாறும், நெருக்கடிக்குஈடுகொடுத்து நிற்கத் தக்கவாறும் திட்டமிடப்படவேண்டியிருக்கிறது. பலவானுகவிளங்குவதே இன்றையநிலைமையில் நெருக்கடியைத் தீர்க்கும் பரிகாரமாகும். இதேசமயம் நமக்கு உள்நாட்டில் மகத்தானவேலைகள்உள்ளன. நமதுசமுதாய இன்ஷூரன்ஸ்திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். தொழிலாளிகளின் சேமலாபங்களைக் கருத்திற்கொண்டு, பயன்தரும் திட்டங்களை நடைமுறைக்குக்கொண்டுவரவேண்டும்.

### ஒன்றாய்நின்றுபலம்பெறுவோம்

நெருக்கடியான இந்நேரத்தில் காங்கிரஸ் ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். அதற்காகநீங்கள் மனம்விட்டு விவாதிக்கக்கூடாதுஎன்று சொல்லவில்லை. நீர் ஆராய்ந்து முடிவுக்குவாருங்கள். இந்நாட்டில் சர்வாதிகாரம்இல்லை. நாம் ஒன்றாய்நின்று பலம் பெறவேண்டும் என்று உங்களிடம் கோரும்போது, ஒவ்வொரு காங்கிரஸ்அங்கத்தினரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் நமதுகட்சி நலன்களுக்கும், சொந்த நலன்களுக்கும் மேலாகத் தேசநலன்களை, சுதந்திரஉலகநலன்களைப் பொறுப்புடன் போற்றிநடக்கவேண்டும் என்றே கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமாதானம் நமக்கு விலைமதிக்கவொண்ணாதது. மனிதசாதியின் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் யாவரோடும் நாம்ஒன்றாய்நிற்போமாக. சுதந்திரத்தைக்காக்கவும், தர்மம் தலைதூக்கிநிற்கவும் அவசியமானல் நாம் போராடுவோம்.

— அமெரிக்க செய்தி

## கடற்தொழிலும் கூட்டுறவும்

இலங்கை முழுவதும் கூட்டுறவு முறையிலே மீன்பிடிதொழிலை அமைப்பதில் ஒத்துழைப்பையும், உதவியையும் பெற்றுக்கொள்ளும் நோக்கமாகக் கைத்தொழில்–கடற்தொழில் ஐக்கிய மந்திரியாரான திரு. எச். டி. ஸ்ரீவர்தன அவர்கள் சென்றசனிக்கிழமை கொழும்பு அதிமேற்றிராணியாருடனும், ஏனையகுருசிரேஷ்டர்களுடனும் இருமணிநேரம்வரையில் கலந்து ஆலோசனை நடத்தியிருக்கின்றார். இக்கூட்டத்துக்கு இலங்கையிலுள்ள சகல மேற்றிராணிமார்களும் அழைக்கப்பெற்றிருந்தார்கள். சிலர் சமுகமளித்தனர். மற்றைஏனையோர் சமுகமளிக்க வசதிப்படவில்லையெனத் தெலிபோன் மூலம் தெரிவித்தனர். கூட்டுறவு முறையிலே மீன்பிடித்தலை விருத்தி செய்வதற்கென்று நிகழும் அரசிறை வருடச் செலவுத்திட்டத்தில் 30 லட்சம் ரூபா விடப்பட்டிருக்கிறது. கடற்தொழிற்பகுதியானது கூட்டுறவுப்பகுதியின் உதவியுடன் கூட்டுறவுச் சங்கங்களையும், யூனியன்களையும் ஆக்கிக் கொண்டுவருகிறது.

## சென்னையிலிருந்து வெங்காயம்

சென்னைமாகாணத்திலிருந்து இலங்கைக்கு ஈரவெங்காயம் ஏற்றுமதி செய்யலாமென இந்தியஅரசாங்கம் கடைசியாக அனுமதித்துவிட்டது. அங்கிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய ஈரவெங்காயம் சென்றமார்கழி 31-ந்திகதிவரையில் நிறுத்திவைக்கப்பட்டமையாலே, அதற்கு இங்கே தட்டுப்பாடு ஏற்பட்டதோடு, ஈரவெங்காய விலையும் ஏறக் குறைய இருமடங்காயிற்று. சென்னை வெங்காயம் விரைவிலே வந்துசேர்ந்ததும் அதன் விலை இறங்கிவிடுமெனத் தற்போது வியாபாரிகள் கூறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினந்தோறும் கிறிஸ்மஸ்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

உங்கள் ஒவ்வொருவருடனும் ஒன்றிக்கும்படி வெகுஆசையாயிருக்கிறார். ஒவ்வொருஇருதயத்திலும் அவர் உதிக்க விரும்புகிறார். எனின், உண்மையாகவே ஒவ்வொருநாளும் கிறிஸ்மஸ் பெருநாளே அல்லவா?

ஆதலின் நாம் ஒவ்வொரு நாளும் பெத்லெகேமுக்குச் செல்வோம். இடையர்களைப்போல் தீவிரமாய் நேரத்தோடு செல்வோம். சென்றால் இடையர்களைப்போல் நாம் மரியம்மாளையும், முன்னிட்டியில் கிடத்தப்பட்டிருக்கும் குழந்தையையும் காண்போம். அந்தஅதியாச்சரியத்துக்குரிய ஐக்கியத்தில் தேவகுழந்தையின் அழகையும் மகிமையையும் பார்ப்போம். பீடம்என்னும் தொட்டிலில் நாம் கேட்டவைகளையும், கண்டவைகளையும்பற்றிக் கடவுளை வாழ்த்திப் போற்றிக்கொண்டு வீடு திரும்புவோம்.

ஒவ்வொருநாளும் கர்த்தர்பிறந்ததிருநாள். அதனால்தான் ஒவ்வொரு பூசையின் முடிவிலும் "வார்த்தையானவர் மாம்சமாகி நம்மத்தியில் வாசஞ்செய்தார். நாம் அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவின் ஏகசுதனுக்குரிய மகிமைக்கு நிகராயிருந்தது; அவர் இஷ்டப் பிரசாதமும், சத்தியமும் நிறைந்தவர்" என்னும் அர்ச். அருளப்பரின் வசனங்களை நாம் செல்ல வேண்டும்எனத் திருச்சபை உத்தரவிட்டிருக்கிறது.

## ஊர்காவற்றுறை

காலநிலை—இவ்வருடமும் காலமழை பொய்த்துவிட்டமையால்குளம், கேணி, கூபம்முதலியன வற்றிவரண்டு விட்டன. இம்மாசந்தானும் மழை வருஷிக்காவிடில், மாஞ்செடிகள்எல்லாம் பட்டு, மாடாடு முதலியன இறந்து, மன்பதையும் தண்ணீர்ப்பஞ்சத்தால் வாடவேண்டியிருக்கும். கோவில்களிலே மழைக்காகச் செபம் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

அகவிலை—தானியவிலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டுவருகின்றது. ஊர் அரிசி படிஒன்று 90 சதமாய்இருந்தது, இப்போ 1 ரூபா 25 சதமாக விலைப்படுகின்றது. அரசினர் இவ்விஷயத்தில் தலையிடாவிடின் அரிசிவிலை இன்னும் ஏறும்போலிருக்கிறது.

ஊர்காவற்றுறைமுகம்—இத்துறைமுகத்தைத் தோண்டிப் புகைக்கப்பல்கள் வந்துபோகச்செய்வதற்கும் அதனை விசாலமாக்குவதற்கும் வேண்டியமுயற்சிஎல்லாம் துரிதமாகநடைபெறுகின்றது. அரசினரும் இத்துறைமுகத்தைத் திறந்துவைக்க எண்ணங்கொண்டிருப்பதாகவும் விளங்கக்கிடக்கிறது. இவ்விஷயத்திலே எங்கள் எம். பி. அவர்கள் மந்திரிசபையைத்தூண்டி வேலைசெய்வரேல் காரியம்அனுகூலத்துக்கு வருமெனச் சனங்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

மரண சங்கதி — இங்கு காம்பன் பதிவாசியும், பரிசுத்த தேவமாதா கோவிலைச்சேர்ந்தவரும், கொழும்புப் பிரபல வியாபாரியும், எவராலும நன்கறியப்பட்டவருமான திரு. ச. வஸ்தியாம்பிள்ளையின புத்திரியான மேரி கொன்சிஎன்பவ தனதுஏழாவதுவயதில் காத்திராட்பிரகாரம் உண்டுபட்ட நோய்காரணமாகவருந்தி எவ்வித சிகிச்சையாலும் குணமுறாது தனது பெற்றோர், சுற்றத்தோர், சகோதரர் மனம்வருந்த மரணத்திரையில் மறையலாயிற்று. மறுநாட்காலை இவவுடைய மேனியானது அழகாந்தபேழையில் வைத்து நாலுகோயில்மணிகளும்துக்கநாதஞ்செய்ய இனசனர், சிநேகிதர் திரளாகக்கூடிய சமூகத்திலே பூமதானஞ்செய்யப்பட்டது.

R. I. P.

Mal. No. 473. Eng.

## பிரான்சிய சேனையைக் குயினைன் காப்பாற்றியது

முதலாவதுஉலகயுத்தம் கடந்தகாலத்திலே 1918-ம் ஆண்டு ஆனிமாதத்துக்கும், மார்கழிமாதத்துக்குமிடையிலே மசடோனியாவில் பிரான்சிய சேனையைச்சேர்ந்த 60,000 போர்வீரர்கள் மலேரியாவால்பீடிக்கப்பட்டு வருந்தினார்கள். பட்டாளஅதிகாரிகளும், போர்வீரர்களுமாக 20,000 பேர் ஏலவேதானே தங்கள்தேசத்துக்குத் திரும்ப அனுப்பிவைக்கப்பட்டனர். போர்க்களத்தின்முன்னணியை20,000 போர்வீரரே தாங்கிநின்றனர். "எனது சைனியம் ஆஸ்பத்திரியிலே குலைந்து கிடக்கிறது" என்று ஜெனறல் சாறெயில் பிரான்சிய யுத்தமந்திரியாருக்கு எழுதினார்.

மிகப்பயங்கரமான இந்த ஆபத்து நேர்ந்தபின் மலேரியாச்சுரத்தினால் பிரான்சியசேனையை முற்றாக அழிவுறாமல் தடுத்துவைக்கும்படியாகப் பிரான்சியஅரசாங்கம் பேரான மலேரியாநிபுணர்களான சார்ஜன்சகோதரர்களை அனுப்பிவைத்தது. குயினைனை அருந்தச்செய்வதாலே மலேரியாவைஎதிர்த்துச் சேனைமுழுவதையும் பாதியாமல்செய்வதற்கென விடாதபோராட்டம்ஒன்று தொடக்கப்பட்டது. குயினைன் சிகிச்சைக்குள்ளாகாது விலகிக்கொள்ள முயன்றஎவரும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இந்தமலேரியாத்தடைப் போராட்டத்தின்வெற்றியை நிச்சயமாக்கும்படியாய்க் கண்டிப்பான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. குயினைன்கொண்டு மொத்தமாக யாவரையுமே மலேரியாபாதியாமல் செய்துவிட்டமைபற்றி டக்றர் வசாட்அவர்கள் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"கொள்ளைநோய்களை எதிர்த்து நடத்தும்போரிலே அவைகளைவெற்றிகொள்ளும்விஷயமாகப் பலம்பொருந்தியசத்துராதியாய்இருப்பது உபேக்ஷையேயாகும்."

இதிலிருந்து முந்திய சர்வதேசசங்கத்து அதிகஞ்சிறந்த நிபுணர்களைக் கொண்ட மலேரியாக்கம்மிஷன் செய்துள்ளசிபாரிசுகளை மேற்கொண்டு நடக்குமிடத்து, மலேரியாவைவெற்றிகொள்வது இலகுவாகும். அதாவது மலேரியாக்காலம்முழுவதிலும் தினமும் 6 கிறேய்ன் குயினைனும், ஓர்கால் மலேரியாகாணுமிடத்து 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைனும் அருந்துவதுமே.

இந்த ஆலோசனையைப் பின்பற்றுமிடத்து, ஒருவர் மலேரியாவிலிருந்தும், அதனாலேற்படும் தீமைக்கேதுவான விளைவுகளிலிருந்தும் பலிதமான விதமாய்க் காப்பாற்றப்படமுடியுமென நிச்சயமாயிருக்கலாம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் அணைகடந்தகிருபையினாலும் பொம்பேயிமாதாவினதும், சிறியபுஷ்பத்தினதும் இடையறுமனுப்பேசுதலினாலும் யான் இரந்துகேட்ட இருகாரியங்களும் அனுகூலமடையலாயின. யேசுவின் அரசும் மேற்படி சுத்தவாளர்களின் புகழும் ஓங்குவதாக!

பொகவந்தலாவை M. E. G.


... அத்துணை பலமுள்ளதுமே




நமது குழந்தை அத்துணை பலமுடையதாகக் கூடுமென்று நாம் கனவிலும் ஒருபோதும் நினைக்கவில்லை.... குழந்தையை லெக்டோஜன் கொண்டு போஷிக்கிறவரையில் அது சாத்தியமாகுமென்று நாம் ஒருபோதும் காத்திருக்கவில்லை. இப்போது நமது குழந்தை பலமுள்ளதாய், நன்கு வளர்ச்சியடைவதாய் சுகத்திலும், வலிமையிலும், சுதித்துவருகின்றது. லெக்டோஜன் எமதுவீட்டில் நாம் தெரிந்துகொண்ட முதலாம்நம்பர் உணவாகும்.

ஆம், எங்கெங்குமே தாய்மாரெல்லாம் இதேமாதிரித்தான்சொல்லுகின்றனர். எங்கள் குழந்தைக்கு லெக்டோஜன்தான் சிறந்தது. உங்கள்குழந்தைக்கு வாழ்க்கையில் ஆரோக்கியமுள்ள தொடக்கத்தை அருளுங்கள், குழந்தையின் போஷணைக்கென்று விசேஷவிதமாகத் தயாரிக்கப்பட்ட... லெக்டோஜன்கொண்டு குழந்தையைப் போஷியுங்கள்.

# லெக்டோஜன்

உலகத்திலுள்ள குழந்தைகளின் உணவு.


## சூரியோதய சனசமூக நிலைய ஆண்டுநிறைவுவிழா
### கோப்பாய்

கடந்த 8-1-51 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் எமதுநிலைய விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட பந்தரில் இவ்விழா கோப்பாய்த்தொகுதிப் பாராளுமன்றப்பிரதிநிதி திரு. சி. வன்னியசிங்கம் அவர்கள் தலைமையில்ஆரம்பமாயிற்று. கோப்பாய்க் கிராமச்சங்க உபதலைவர் திரு. என். அருளம்பலம் அவர்களது வரவேற்புரையின்பின் நிலையக்காரியதரிசியவர்களால் சென்ற ஆண்டுஅறிக்கையும், வரவுசெலவு விபரங்களும் வாசித்துச் சமர்ப்பிக்கப்பட்டன.

தலைவர் தமதுஆரம்பவுரையிலே, இன்று பாட்டம்பாட்டமாக இரைத்து இரைத்துப் பெய்துகொண்டிருக்கின்ற பெருமழையையும் பொருட்படுத்தாமல் இந்தஆண்டுவிழாவிற்குச் சமுகங்கொடுத்திருக்கின்ற அன்பர்கள்அனைவரினதும்எண்ணிக்கையே இச்சனசமூக நிலையத்தின்சிறப்பிற்கும், வளர்ச்சிக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது; இச்சனசமூகநிலையம் இன்னும்மேனிலையடைய இறைவனின் திருவருளை வேண்டிக்கொள்ளுகிறேன் எனக் குறிப்பிட்டார். செல்வி விசிறிற்அம்மா பாடிய இனியகீதத்தின்பின் வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி (டி. ஆர். ஓ.) அவர்கள் "சனசமூகநிலையம்" என்னும் விஷயம்பற்றியும், கோப்பாய் அரசினர்ஆங்கிலசலாசாலைத் தலைமைஆசிரியர் திரு. என். யோசெவ் அவர்கள் "சமூகமுன்னேற்றத்திற்குரிய வழிகள்" என்னும் விஷயம்பற்றியும், யாழ்ப்பாண விவசாய அதிபர் "கிருஷிகம்" என்னும் விஷயம் பற்றியும், கோப்பாய்ப் பொலிஸ்இன்ஸ்பெக்றர் "கோப்பாய்க் கிராமத்தின் முன்னேற்றம்" என்னும் விஷயம்பற்றியும், அகிலஇலங்கை ஒடுக்கப்படும் ஊழியர்சங்கத்தலைவர் திரு. யோவேல் போல்அவர்கள் "எம்மவர்களும் சமுதாயநிலையமும்" என்னும்விஷயம்பற்றியும், திரு. ஆ. மார்க்கண்டன் B. A., B. Sc. அவர்கள் "ஹரிஜனரும் காந்தியடிகளும்" என்னும் விஷயம்பற்றியும், நீர்வேலி பண்டிதர் என். எஸ். முருகேசபிள்ளை அவர்கள் "கற்றுங்கொழுகு" என்னும் விஷயம்பற்றியும், கொக்குவில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைஆசிரியர் திரு. பி. கந்தையா அவர்கள் "ஹரிஜனரும் காந்தீயமும்" என்னும்விஷயம்பற்றியும் சிறந்தசொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

கோப்பாய் இசைமணி திரு. ப. தியாகராசா அவர்கள் நூதன இசைவிருந்தளித்துச் சபையோரை மகிழ்வித்தார். தலைவரின் முடிவுரையின்பின் காரியதரிசியவர்களின் இனிய நன்றியுரையுடன் இரவு 11-30 மணியளவில் விழாநிறைவெய்தியது. இவ்விழாவிற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டதும், விடாதுமழைபெய்தும் விழா சிறப்பாகநடைபெற்றதும் ஈண்டு குறிப்பிடத்தக்கன. மறுநாள் 9-1-51 காலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதுவருடத்துக்கான உத்தியோகத்தவர்களும், நிருவாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

— நிருபர்

—மேற்குஜேர்மனியிலே கடந்த பன்னிருமாசங்களிலும் குருத்துவத்துக்கான அழைத்தல்கள் வெகுவாக அதிகரித்திருப்பதாய்க் கொலோன் நகர கருதினால்ஆண்டவரின் காரியாலயம் அறிவித்திருக்கிறது. எல்பே நதிக்குமேற்கேயுள்ள குருமடங்களில் வேதசாஸ்திரம்படிக்கும் குருத்துவ மாணவர்களின்தொகை 2,026 பேராக அதிகரித்திருக்கிறது.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, 18 January 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org